# பரிசுத்த ஆவியாகிய நபரும் வேலைகளும்

## The Person & Work of the Holy Spirit

R.A.Torrey

Copyright © 1996 by Whitaker House

## அத்தியாயம் 1

# பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட குணம்

(The Personality of the Holy Spirit)

ஒரு நபர், பரிசுத்த ஆவியானவரின் கிரியை சரியாக அறிந்து கொள்ளும் முன்பு, முதலாவதாக அவருடைய குணநலன்களை அறிந்து கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரைப்போல இருக்கிறார் என்பதை முதலாவதாக அறியும் முன்னதாக, அவருடைய கிரியைப்பற்றி அறியவும் ஆராயவும் முயற்சிப்பதே அடிக்கடி தவறுகளுக்கும் மிதமிஞ்சிய கொள்கைகளுக்கும் மூலகாரணமாக இருக்கிறது.

ஆராதிக்கும் கண்ணோட்டத்தில் கவனிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நமது பாராட்டுக்கும், நமது விசுவாசத்திற்கும், நமது அன்புக்கும், நமது முழுமையான அற்பணிப்புக்கும் பாத்திரராக இருக்கும் ஒரு தெய்வீக நபராக இருக்கிறாரா அல்லது அவர் தேவனிடத்திலிருந்து வந்த ஏதோ ஒரு செல்வாக்காகவோ (ஈர்க்கும் சக்தியாகவோ) (influence), ஒரு வல்லமையாகவோ (power), அல்லது தேவனால் நம்மிடத்திற்கு கடத்திவிடப்பட்ட ஒரு பிரகாசமாகவோ (illumination) இருக்கிறாரா என்று ஒரு சரியான முடிவுக்கு வருவது மிகமுக்கியமாகும். பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீக நபராக இருக்கும்போது, அதை நாம் அறியாமலிருந்தால், தெய்வீகமான அவருக்கு செலுத்த வேண்டிய ஆராதனையையும் விசுவாசத்தையும் அன்பையும் அற்பணிப்பையும் அவருக்குச் செலுத்தாமல் திருடிக்கொண்டிருப்போம்.

நாம் பலவீனமாகவோ அல்லது அறியாமையிலோ இருக்கும் வேளையில் திடீரென்று வந்து நம்மைப்பிடித்துகொண்டு நம்மைப் பயன்படுத்தும் ஒரு மா்மமான, அதிசயமான வல்லமைதான் பரிசுத்த ஆவி என்று நினைப்போமானால், நாகரீகமடையாத ஆப்பிரிக்க மக்களைத் திடீரென்று ஆட்கொண்டு பயன்படுத்துகின்ற விநோத உருவிலிருக்கும் அவர்களது தெய்வத்திற்கும் பரிசுத்த ஆவிக்கும் வித்தியாசமே இல்லாமலாக்கி விடுவீர்கள். பரிசுத்த ஆவியானவர் எல்லையில்லாத பரிசுத்தமும், எல்லையில்லாத ஞானமும், எல்லையில்லாத வல்லமையும், எல்லையில்லாத மென்மையும் கொண்ட ஒரு உண்மையான நபர் என்பதை நாம் அறிந்துகொள்வது நம் நடைமுறைவாழ்வுக்கு மிக அவசியமாகும். அநேகர் எண்ணுகிறது போல பரிசுத்த ஆவியானவர் ஒரு வல்லமையாகவும் செல்வாக்காகவும் இருப்பாரானால், ‘‘இந்த பரிசுத்த ஆவி என்ற வல்லமையை எப்படி அதிகமாக பெற்றுக்கொள்ளலாம்?’’ என்பதே நமது தொடர்ச்சியான எண்ணமாக இருக்கும். வேதாகமம் சொல்வதுபோல பரிசுத்த ஆவியானவரை ஒரு தெய்வீக நபராக நாம் எண்ணுவோமானால், ‘‘பரிசுத்த ஆவியானவர் என்னை அதிகமாக ஆட்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்? நான் எப்படி நடந்து கொள்ளவேண்டும்’’ என்பதே நமது பணிவான எண்ணமாக இருக்கும்.

பரிசுத்த ஆவியை ஒரு செல்வாக்காகவோ, ஒரு சக்தியாகவோ மக்கள் கருதுவார்களானால், அதை அவர்கள் ஏதாவது ஒரு வகையில் பெற்று, அதைப்பிடித்து வைத்துக்கொண்டு, அவர்களது சுயமுன்னேற்றத்திற்காகவும், சுயநல நோக்கத்திற்காகவும்– தங்களை உயர்த்துவதற்காகவும் பயன்படுத்த அவர்கள் முயலக்கூடும். பரிசுத்த ஆவியை ஒரு நபராக நினைக்காமல், ஒரு வல்லமையைப் பெற்றுக்கொண்டதாக கற்பனை செய்கிறவர்கள், ஆவிக்குரிய பெருமையினாலும் கர்வத்தினாலும் மற்றவர்களைவிட தங்களை மிக உயர்மட்டத்தில் இருப்பதாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். ‘‘நான் ஆவியில் நிறைந்த ஒரு மனிதன்’’ அல்லது ‘‘நான் ஆவியில் நிறைந்த ஒரு பெண்’’ என்று சிலர் சொல்கிறதை நீங்கள் அடிக்கடி கேட்க நேரிட்டிருக்கும்.

ஆனால் எல்லையில்லாத மகத்துவமும், மகிமையும், பரிசுத்தமும், வல்லமையும் உடைய பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீக நபராக நம் இதயத்தில் அமர்ந்துகொண்டு தன்னை ஒரு முக்கியமான நபராக காட்டுவதற்காக நம் வாழ்க்கையை ஆக்கிரமித்துக்கொண்டு நம்மைப் பயன்படுத்த வந்திருக்கிறார் என்ற எண்ணம் நமக்கு இருக்குமானால், அந்த எண்ணமே நம்மை புழுதியில் போட்டு நம்மை புழுதியிலேயே கிடக்கச் செய்துவிடும். தேவமகத்துவமும் மகிமையும் உள்ளவராகிய அவர் என் இதயத்தில் குடியிருந்துகொண்டு என்னையும்கூட பயன்படுத்த ஆயத்தமாக இருக்கிறாரே என்ற எண்ணம் இருக்குமானால் அது உங்களை உயரவைக்கும். இப்படிப்பட்ட எண்ணமே அதிக மனத்தாழ்மை உள்ளதாகவும், அதிகமாக நெஞ்சை நெகிழச்செய்வதாகவும் இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்பதை அனுபவப்பூர்வமாக அறிந்து கொள்வது மிக முக்கியமாகும். பரிசுத்த ஆவியானவர், ஒரு தெய்வீக நபராக இருக்கிறார் என்பதை அறிந்துகொண்ட பின்னர் எங்களது சொந்த வாழ்க்கையில் எங்களுக்கு வந்த ஆசீர்வாதம் அளவில்லாதது என்று பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் சாட்சிசொல்ல முடியும். பரிசுத்தஆவி (தேவனிடமிருந்து வந்தது உண்மைதான்) கிருபைபொருந்திய ஒரு செல்வாக்கு மட்டுமல்ல, <u>இயேசு கிறிஸ்துவைப் போல அவர் மெய்யான ஒரு நபராக, எக்காலமும் வாழ்கின்றவராக, நேசிக்கின்ற நண்பராக, வல்லமையுள்ள உதவியாளராக எப்போதும் அவர்கள் பக்கத்தில் மட்டுமல்ல அவர்கள் இதயத்திற்குள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் தங்கியிருந்து அவர்கள் வாழ்வில் நேரிடும் ஒவ்வொரு அவசரகால நிகழ்ச்சியிலும் அவர்களுக்காக ஆவன செய்ய ஆயத்தமாக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொண்டவர்கள்.</u> ‘பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்ற தெளிவான எண்ணம் அவர்களை இறுகப்பிடித்துக்கொண்டதன் விளைவாக அவரை தனிப்பட்டமுறையில் அறிந்ததினால் (இறையியல் அறிவினால் அல்ல, அனுபவப்பூர்வமாக அறிந்துகொண்டதன் விளைவாக) அவர்களது கிறிஸ்தவ வாழ்க்கையில் முழுமையான மறுரூப அனுபவம் ஏற்பட்டிருக்கிறது’ என்று ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ ஊழியர்களும், கிறிஸ்தவர்களும் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள், எனக்கு கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்பதை தெரிவிக்கும் திட்டவட்டமான ஆதாரங்கள், வேதாகமத்தில் குறைந்த பட்சம் நான்கு உள்ளன.

1. **ஒரு நபருக்கு இருக்கும் அனைத்து குணநலன்களும் பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு என்பதை வேதாகமம் தெரிவிக்கிறது.**

எவைகள் ஒரு தனிநபரின் தனித்தன்மையை (personality) குறிக்கும் குணநலன்களாகவும், அடையாளங்களுமாகவும் இருக்கின்றன? அறிவு, உணர்ச்சி, மற்றும் சித்தம் என்பவைகளே. ஒரு உயிர் சிந்திக்கவும், உணரவும், விரும்பவும் (முடிவெடுக்கவும்) முடியுமானால் அது ஒரு நபராகத்தான் இருக்கமுடியும். பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்று நாம் சொல்லும்போது சிலர் அவருக்கு கைகளும் கால்களும் கண்களும் காதுகளும் வாயும் பிற அங்கங்களும் உடையவராக புரிந்துகொள்கிறார்கள். ஆனால் அவைகள் ஒரு நபரின் ஆளத்துவத்தின் குணநலன்களாக இல்லாமல், அவைகள் சரீரபிரகாரமான அவயங்களாக இருக்கின்றன. ஒரு நபருக்கு இருக்கும் (personality) எல்லா குணநலன்களும் அடையாளங்களும் பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு என்பதை வேதாகமத்தில் பழையஏற்பாடும் புதிய ஏற்பாடும் திரும்பத் திரும்ப கூறுகின்றது.

> *நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*
> (1 கொரிந்தியர் 2:10-11)

இங்கே, பரிசுத்த ஆவியானவர் **அறிவுடையவர்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவி, சத்தியத்தை புரிந்துகொள்ளச் செய்யும்படி நம்மை பிரகாசிக்கச்செய்ய வந்த ஒரு செல்வாக்கு (influence) அல்ல என்றும் அவரே சத்தியத்தை அறிந்தவராகவும் நம்மை போதிக்கிறவராகவும் இருக்கிறார் என்பதை நாம் தெளிவாக கற்றுக்கொண்டோம்.

மேலும் 1கொரிந்தியர் 12:10இல் ‘‘இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்’’ என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே, பரிசுத்த ஆவியானவருக்கு **சித்தம் உண்டு** என்றும் அவரை நாம் பிடித்துவைத்து நம் விருப்பத்தின்படி பயன்படுத்தக்கூடிய ஒரு சக்தி அல்ல என்றும் அவர் ராஜரீக மகத்துவம் உடையவராக, அவருடைய விருப்பத்தின்படி நம்மை பயன்படுத்துகின்ற ஒரு நபராக இருக்கிறார் என்றும் நாம் கற்றுக்கொண்டோம். பரிசுத்த ஆவியானவரோடு சரியாக உறவுவைத்துக்கொள்ள இவ்வேறுபாட்டை புரிந்துகொள்வது மிகமுக்கியமாகும். இவ்வேறுபாட்டை அறியாததால் அநேக ஊழியர்கள், ஊழியம் செய்வதற்கு தேவையான வல்லமையையும் திறமையையும் பெருக்கிக்கொள்ள வகைதேடி உத்தமமாய் அலைந்து வழிதவறிப்போய்விடுகிறார்கள். ஊழியத்தையும் சொந்த காரியங்களையும் சுய விருப்பத்தின்படி செய்வதற்காக இந்த மர்மமான, மகத்துவ வல்லமையை பெற்றுக்கொள்ளவதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவரை பிடித்துவைத்துக்கொண்டு, கண்மூடித்தனமாகவும் அறிவில்லாமலும் அவரைப் பயன்படுத்துவதற்கு அவர் ஒரு தெய்வீகமான வல்லமை அல்ல என்பதையும் அவர் எல்லையில்லா ஞானமும் எல்லையில்லா வல்லமையும் கொண்டவராகவும் அவர்களை நிரப்பி அவருடைய பரிபூரண சித்தத்தின்படி அவர்களைப் பயன்படுத்த விருப்பம்

உடையவராகவும் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளும்வரை அவர்கள் அந்த வல்லமையை ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நிதானமாக சிந்தித்துப் பார்த்தோமானால் அதிகஅறியாமையும் அதிகதவறுசெய்யும் இயல்பும் கொண்ட நாம் அவரை பிடித்துவைத்துக்கொண்டு நம் விருப்பம்போல பயன்படுத்துமளவுக்கு நாம் ஒரு தெய்வீக வல்லமைஉடைய நபர் அல்ல என்பதற்காக நாம் சந்தோஷப்பட வேண்டும். அப்படி ஒரு வல்லமை நமக்கு இருந்திருந்தால் அதன் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாய் இருந்திருக்கும். ஒருபோதும் தவறுசெய்யாதவரும் நம்மை ஆட்கொண்டு, நமக்கு எந்த வரங்கள் மிகசிறந்தனவாக இருக்கும் என்று அவர் காண்கிறாரோ அவைகளை நமக்கு பகிர்ந்தளித்து அவருடைய ஞானத்தின்படியும் அவருடைய தயவுள்ள சித்தத்தின்படியும் நம்மைப் பயன்படுத்த விருப்பமுள்ள ஒரு தெய்வீகமான நபராக பரிசுத்தஆவியானவர் இருக்கிறார் என்ற எண்ணம் நம்மில் ஆழமாக வேரூன்றியிருக்குமானால் அது நம் இதயத்தில் அளவில்லாத, பரிசுத்தமான ஆனந்தத்தை கொண்டுவரும். “ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்” என்று ரோமர் 8:27இல் படிக்கிறோம். இதே வேதபகுதியில் பரிசுத்தஆவியானவர் **சிந்தை உடையவர்** என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் சிந்தை என்றால் ‘எண்ணத்தையும் உணர்ச்சியையும் நோக்கத்தையும்’ உள்ளடக்கிய அர்த்தம்கொண்ட ஒரு வார்த்தையாகும். இதே வார்த்தைதான் ரோமர் 8:7இல் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். “எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.” ஒரு நபரின் தனித்தன்மையின் (personality) ஒரு அம்சமாக இருக்கும் சிந்தையானது பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு.

ரோமர் 15:32இல் பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட குணத்தை (ஆளத்துவத்தின் சுபாவத்தை) இதயத்தின் அடித்தளத்தை தொடும்ரீதியில் எழுதப்பட்டுள்ளது. “நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.” இங்கே பரிசுத்த ஆவியானவர் **அன்புடையவர்** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘ஆவியானவருடைய அன்பினிமித்தம்’ என்ற சொற்றொடரை நன்றாக தியானிப்பது நலம் விளைவிக்கும்.

பொதுவாக நாம் பிதாவாகிய தேவனுடைய அன்பைக்குறித்து அதிகமாக சிந்திக்கிறோம், பேசுகிறோம். அதுவே நாம் தினந்தோறும் சிந்திக்கும் தலைப்பாக இருக்கிறது. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பைக்குறித்தும் அடிக்கடி சிந்திக்கிறோம், பேசுகிறோம். இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பை யோசிக்காமல் ஒரு நாளைக்கூட கழிக்கிறவன் எப்படி கிறிஸ்தவனாக இருக்க முடியும் ஆனால் “ஆவியானவரின் அன்பைக்குறித்து எத்தனை முறை நாம் யோசித்திருப்போம், தியானித்திருப்போம்?

ஒரு கிறிஸ்தவன் எப்படி வாழ கடமைப்பட்டிருக்கிறானோ அப்படி நாம் வாழ்வோமானால், நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்னதாக முழங்கால்படியிட்டு அவருடைய முகத்தை நோக்கி, ‘‘பிதாவே, உம்முடைய ஒரே பேரான குமாரனை எனக்காக கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுக்கும்படி உம்மை வழிநடத்திய உமது மகாபெரிய அன்புக்காக நன்றி’’ என்று சொல்வோம். ஒவ்வொரு நாளும் நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தை நோக்கி, ‘‘மகிமையுள்ள கர்த்தரும் இரட்சகருமாகிய, தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே தேவ மகிமையை கொள்ளைப்பொருளாக எண்ணாமல் பரலோகத்தின் மகிமையை முற்றும் துறந்து உம்மையே வெறுமையாக்கி உலகத்தின் எல்லா அவமானத்தையும் எனது பாவங்களையும் உம்மேல் ஏற்றுக்கொண்டு எனக்குப் பதிலாக சிலுவையில் நீர் தொங்கும்படி உம்மை வழிநடத்திய உமது மகாபெரிய அன்புக்காக உமக்கு நன்றி’’ என்று சொல்வோம். ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவரை நோக்கி முழங்கால்படியிட்டு, ‘‘பரிசுத்த ஆவியானவரே, நித்தியமானவரே, எல்லையில்லாதவராகிய தேவனுடைய ஆவியானவரே, பாவமும் இருளுமான இவ்வுலகத்திற்கு வந்து என்னைத் தேடித்தெரிந்துகொண்டு, நான் இருக்கும் அவல நிலையில் என்னை மீட்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால்தான் முடியும் என்று எனக்கு வெளிப்படுத்தும் வரை பொறுமையாக என்னை பின்தொடரும்படி உம்மை வழிநடத்திய உமது மகாபெரிய அன்புக்காக நன்றி’’ என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறோம்? நம்மை இரட்சித்ததற்காக பிதாவின் அன்புக்கும் அவரது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் அன்புக்கும் கடமைப்பட்டிருப்பது போலவே உண்மையாக ஆவியானவரின் அன்புக்கும் நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

அழிவிலிருந்த என்னை நோக்கிப்பார்த்து, எனது பரிபூரண மீட்புக்காக தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை கல்வாரி சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுத்த பிதாவாகிய தேவனுடைய அன்பு இல்லாதிருந்தால் நான் இன்று நரகத்தில் இருந்திருப்பேன். அவல நிலையிலிருந்த என்னை மீட்பதற்காக, என்னை நோக்கிப்பார்த்து, பிதாவுக்கு கீழ்படிந்து உலகத்தின் அனைத்து அவமானத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி பரலோகத்தின் அனைத்து மகிமையையும் துறந்து நான் இருந்த இடத்தை அவர் ஏற்றுக்கொண்டு எனக்குப் பதிலாக அவர் சாபமாகி, கல்வாரி சிலுவையிலே எனக்காக அவருடைய ஜீவனையே ஊற்றிய நித்திய தேவவார்த்தையானவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு இல்லாதிருந்தால் நான் இன்று நரகத்தில் இருந்திருப்பேன். முழு குருட்டாட்டத்திலும் அழிவிலும் இருந்த என்னை தேடிகண்டுபிடித்து அவரிடத்தில் நடத்தும்படி தமது குமாரனுடைய ஜெபத்திற்கு (யோவான் 15:16யை பார்க்கவும்) விடையாக பிதா அனுப்பிய பரிசுத்த ஆவியானவரின் அன்பு இல்லாமலிருந்தால் இன்று நான் நரகத்தில் இருந்திருப்பேன். நாள்தோறும், வாரந்தோறும், வருடந்தோறும் என்னை பின்தொடர்ந்தார்; அவர் சொன்ன ஆலோசனைகளுக்கெல்லாம் நான் பிடிவாதமாக செவிகொடுக்க மறுத்த போதும், எனது பாவவழியானது பரிசுத்தராகிய அவருக்கு துக்கமானதாக இருந்தபோதும், அவருடைய ஆலோசனைக்கு நான் செவிகொடுக்கும்வரை பொறுமையாக என்னை பின்தொடர்ந்து என் வாழ்வுக்கு இரட்சகராகிய இயேசு தேவையாக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தி அவரை என் சொந்த இரட்சகராக என்னை

ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். பரிசுத்த ஆவியானவரின் நீடிய பொறுமையும், சோர்ந்துபோகாமையும், அவரது எல்லையில்லா மென்மையான அன்பும் இல்லாதிருந்தால் இன்று நான் நரகத்திலிருந்திருப்பேன். பரிசுத்தஆவி ஏதோ ஒரு செல்வாக்கோ, ஒரு வல்லமையோ அல்லது ஒரு பிரகாசமோ அல்ல; அவர் பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரனையும் போல ஒரு நபராக இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் என்ற நபரின் தனிப்பட்ட குணத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டப்பட்டுள்ளதுபோல பழைய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நெகேமியா 9:20 படிக்கும்போது நாம் புரிந்துகொள்ளலாம். ‘‘அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர்; அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர்.’’ பரிசுத்த ஆவியானவர் **அறிவை உணர்த்துகிறவராகவும் நல்லவராகவும் இருக்கிறார்** என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த கொள்கையானது புதிய ஏற்பாட்டில் முழுமையாக தரப்பட்டிருக்கும் அளவுக்கு பழைய ஏற்பாட்டில் இல்லாவிடினும் அவரைக்குறித்த கோட்பாடுகளை ஆங்காங்கே பழைய ஏற்பாட்டிலும் கண்டுகொள்ளலாம். ‘‘அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்’’ (எபேசியர் 4:30) பரிசுத்த ஆவியானவர் **துக்கப்படுகிறவர்** என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நம் வாழ்வை பிரகாசிக்கவும், பரிசுத்தப்படுத்தவும், பெலப்படுத்தவும், பார்க்கவோ, உணரவோ, அறியவோ முடியாத ஒரு செல்வாக்காகவோ, ஒரு வல்லமையாகவோ பரிசுத்தஆவியானவர் இல்லை. அதைவிட அளவிடமுடியாத அளவுக்கு உயர்வானவராக இருக்கிறார். நமது இதயங்களில் குடியிருக்கும்படி வந்த ஒரு பரிசுத்த நபராக, நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் நாம் சிந்திக்கும் ஒவ்வொரு எண்ணத்தையும், மின்னல் வேகத்தில் ஊடுருவிச்செல்லும் கற்பனையான எண்ணத்தையும் கூட மிகத்தெளிவாக காணக்கூடியவராக இருக்கிறார். எல்லையில்லாத பரிசுத்தம் உடையவராகிய அவரை, அசுத்தமான, சில்லரைத்தனமான, பரிசுத்தமற்ற, தயவற்ற, சுயநலமான, அற்பத்தனமான, சத்தியமற்ற ஒவ்வொரு செயலும், வார்த்தையும் அவரை ஆழமாக துக்கப்படுத்துகின்றது.

‘இந்த பாவகாரியத்தை என் தாயார் கேள்விப்படநேர்ந்தால் சொல்லமுடியாதஅளவு துக்கப்படுவார்களே’ என்ற ஒரு எண்ணத்தால் எத்தனை முறை ஒரு வாலிபன், தன் வாலிப பருவகாலத்தை சூழ்ந்திருக்கும் இச்சையான சோதனைகளுக்கு இணங்காமல் தன்னைக் காத்துக்கொள்கிறான். எத்தனை முறை சில இளைஞர்கள் பாவமான இடத்தின் வாசலருகே நுழைய இருக்கும் தருவாயில், ‘‘நான் இங்கு நுழைந்தால் என் தாயார் இதைக் குறித்து கேள்விப்பட்டால் அச்செய்தியே அவர்களால் தாங்கமுடியாதபடி அவர்களைக் கொன்றுபோடுமே’’ என்ற எண்ணம் வந்த உடன் அந்த வாசலைவிட்டுத் திரும்பி, தனது தாயை துக்கப்படுத்தாதபடி பரிசுத்தமான வாழ்க்கை வாழச் சென்றிருக்கிறார்கள்.

எந்த தாயைவிடவும் மேலான பரிசுத்தமுடையவர் ஒருவர் இருக்கிறார். நம் தாயைவிடவும் நம்மை அதிகமாக நேசிப்பவரும், நாம் பாவம்செய்யாதபடி வாழவேண்டும் என்பதில் எந்தத் தாயைவிடவும் அதிக கூர்மையானவிழிப்புணர்வும், அதிக பரிசுத்தமும் உடைய ஒருவர் இருக்கிறார். நாம் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், இவர் நம் இதயத்திற்குள் இருந்துகொண்டு, பகலானாலும், மூடப்பட்ட இரவானாலும் நாம் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். பொது இடத்திலோ அல்லது தனி இடத்திலோ நாம் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். நம் சிந்தையில் இடங்கொடுக்கும் ஒவ்வொரு எண்ணத்தையும் அவர் பார்க்கிறார். நம் மனதில் தங்கும்படி கணப்பொழுது இடங்கொடுத்த ஒவ்வொரு கற்பனையையும் மாயஜால எண்ணத்தையும் அவர் பார்க்கிறார். பரிசுத்தமற்ற, தூய்மையற்ற, சுயநலமான, அற்பத்தனமான, சில்லரைத்தனமான, தயவற்ற, கொடூரகுணமுள்ள, அநியாயமான, அல்லது செய்கையிலோ, வார்த்தையிலோ, எண்ணத்திலோ, கற்பனையிலோ தீமையான எந்த காரியமாக இருந்தாலும் அது அவரைத் துக்கப்படுத்துகிறது. ‘‘தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்’’ என்ற சொற்றொடரை உங்கள் இதயத்தின் ஆழத்திற்குள் பதித்துவைப்பீர்களானால், அதுவே நம் குறிக்கோளானால் (முத்திரை வாக்கியமானால்) அவைகள் நம்மை அநேக பாவங்களுக்கு நீங்கலாக்கி காத்துக்கொள்ளும். சில எண்ணங்கள் எனக்குள் நுழைந்து இடம் பிடிப்பதற்காக என்னைத் தாக்கும்போது, ‘‘பரிசுத்த ஆவியானவர் இந்த எண்ணத்தைப் பார்க்கிறார், இதனால் அவர் துக்கப்படுத்தப்படுகிறார்’’ என்ற எண்ணம் வந்ததும் அந்த தீயஎண்ணம் பறந்தோடிவிடுகிறது.

2. **ஒரு நபரால் மட்டுமே செய்யக்கூடிய செயல்களை பரிசுத்த ஆவியானவர் செய்கிறார் என்று வேதாகமம் கூறுகிறது**.

ஒரு நபராக இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட குணநலன்களை நாம் மறுப்போமானால் வேதாகமத்திலுள்ள அநேக பகுதிகள் அர்த்தமற்றதாகவும் முட்டாள்தனமானதாகவும் மாறிவிடும். உதாரணமாக, 1கொரிந்தியர் 2:10இல் ‘‘*நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.*’’ பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆழமான காரியங்களை அறிந்துகொள்ளச் செய்யும் ஒரு பிரகாசமாக இல்லாமல், அவரே தேவனுடைய ஆழமான காரியங்களை **ஆராய்கிறவராகவும்,** பின்னர் அவர் கண்டுகொண்ட அந்த விலைமதிப்பிடமுடியாத கண்டுபிடிப்புகளை நமக்கு **வெளிப்படுத்திக் காண்பிக்கிறவராகவும் இருக்கிறார்**.

வெளிப்படுத்தின விஷேசம் 2:7 இல், ‘‘ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது’’ என்று நாம் படிக்கிறோம். இங்கே பரிசுத்த ஆவியானவர் நம் மனதில் தோன்றும் ஒரு உயிரில்லாத ஒரு காட்சியாக காண்பிக்கப்படாமல், தேவனுடைய விலையேறப்பெற்ற சத்தியத்தை வாஞ்சையுடன் கவனித்து கேட்கும்

ஊழியக்காரனின் காதுகளில் கிசுகிசுக்கிறவராக, தம்முடைய ஆழமான ஞானத்திலிருந்து பேசுகிறவராக பரிசுத்த ஆவியானவர் நம் முன் காட்டப்பட்டுள்ளார்.

கலாத்தியர் 4:6இல், ‘‘மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்’’ என்று நாம் படிக்கிறோம். இங்கே ஒரு விசுவாசியின் இதயத்தில் பரிசுத்த ஆவியானவர் **கூப்பிடுகிறவராக இருக்கிறார்.** நாம் தேவனுடைய புத்திரசுவிகாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்று உறுதியளிக்கும் ஒரு தெய்வீகமான செல்வாக்காக இல்லாமல், பரிசுத்த ஆவியானவர் நம் இதயத்திலிருந்து கூப்பிடுகிறவராகவும் நம்முடைய ஆவியோடு சேர்ந்துகொண்டு நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று சாட்சி கொடுக்கிறவராகவும் இருக்கிறார். (ரோமர் 8:16).

பரிசுத்த ஆவியானவர் **ஜெபிக்கிறவர்** என்று வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> *‘‘அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு **உதவிசெய்கிறார்**. நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு **நமக்காக வேண்டுதல்செய்கிறார்**.’’ (ரோமர் 8:26)*

இந்த வேதவசனத்திலிருந்து, பரிசுத்த ஆவி நம்மை ஜெபிக்கச் செய்கிற ஒரு செல்வாக்கோ – ஆதிக்கமோ இல்லை என்றும், நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று போதிக்கிற, சிந்தனையில் தெளிவை ஏற்படுத்தும் ஒரு பிரகாசமோ அல்ல என்றும், பரிசுத்த ஆவி ஒரு நபராக அவரே நமக்குள்ளிருந்தும் ஜெபிக்கிறார், நம் மூலமாகவும் ஜெபிக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது.

ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்கும் அவனுக்காக ஜெபிப்பதற்காக இரண்டு தெய்வீக நபர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணுவதில் அற்புதமான ஆறுதல் இருக்கிறது. அதில் ஒருவர் இயேசு கிறிஸ்து, அவரே தேவ குமாரனாக இந்த உலகத்திற்கு வந்தவரும், நமது அனைத்து சோதனைகளை அறிந்தவரும், நமது வேதனையாலும் வியாதிகளாலும் வரும் உபத்திரவத்தை உணருகிறவரும், இப்போது உயிர்தெழுந்தவராக பிதாவின் வலதுபக்கத்தில் இருக்கிறவரும், அதிகாரமும் வல்லமையும் உள்ள அந்த இடத்திலிருந்து நமக்காக மன்றாடுவதற்காகவே உயிரோடிருக்கிறார். (படித்துப் பாருங்கள் எபிரேயர் 7:25; 1யோவான் 2:1). இயேசு கிறிஸ்துவைப் போலவே தெய்வீகமான இன்னொரு நபர் இருக்கிறார். அவர் ஒவ்வொரு நாளும் நம்மோடு நடக்கிறவராகவும், நம் இதயத்தின் ஆழத்தில் வாழ்கிறவராகவும், (நம் தேவைகள் என்ன என்று நமக்கே தெரியாமலிருக்கும் போதுகூட) நமது தேவைகளையெல்லாம் அறிந்தவராகவும், இத்தகைய ஆழமான அறிவுடன் நமக்காக பிதாவிடம் வேண்டிக்கொண்டிருக்கிறார். தெய்வீகமான இந்த இருநபர்கள் ஜெபிக்கும்போது ஒரு விசுவாசியின் நிலைமையானது உண்மையில் ஒரு பரிபூரணமான பாதுகாப்பு உடையதாக இருக்கிறது.

யோவான் 15:26 இல், “பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.” இங்கே, நமக்கு முன்பாக, **பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறவர்** என்று கூறப்பட்டிருக்கிறார். அவர் ஒரு விசுவாசியை சாட்சிசொல்ல வைக்கின்ற ஒரு பிரகாசமாக இல்லாமல் அவரே இயேசு கிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுக்கிற ஒரு நபராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் சாட்சியைக் குறித்தும் அவருடைய சாட்சியைத் தன்னகத்தே கொண்ட விசுவாசி கொடுக்கும் சாட்சியைக் குறித்தும் உள்ள ஒரு தெளிவான வித்தியாசத்தை யோவான் 15:27இல் நாம் படித்தறியலாம். “நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.” ஆகவே இரண்டு சாட்சிகள் இருக்கின்றன. ஒன்று பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்கு வழங்கும் சாட்சி, இன்னொன்று விசுவாசி உலகத்துக்கு வழங்கும் சாட்சி.

பரிசுத்த ஆவியானவர் **போதிக்கிறவராகவும் இருக்கிறார்**. *“என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” (யோவான் 14:16).* இதே விதத்தில் கீழே குறிப்பிட்ட வசனத்திலும் நாம் படிக்கலாம்:

> *“இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.” (யோவான் 16:12-14)*

பழையஏற்பாட்டில், “அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியை கட்டளையிட்டீர்;..” என்று (நெகேமியா 9:20) சொல்லப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வேதவசனங்களிலிருந்து பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை புரியவைக்கும் ஒரு பிரகாசம் அல்ல, அவரே ஒவ்வொரு நாளும் நம்மிடத்தில் வந்து, தேவனுடைய சத்தியத்தை போதிக்கிற ஒரு நபராக இருக்கிறார் என்பது நமக்கு பூரணமாக விளங்கிவிட்டது. இயேசு கிறிஸ்துவுக்குள் மிகமனத்தாழ்மையாக இருக்கும் ஒரு விசுவாசிக்கு தேவனுடைய சத்தியத்தை புரிந்துகொள்ள அவர் ஒரு பிரகாசமாக இல்லாமல் அவரே ஒரு தெய்வீகமான ஆசிரியராக வந்து அவன் அறிந்து கொள்ள வேண்டிய சத்தியத்தை அவனுக்கு அனுதினமும் போதிக்கிறார். (படித்துப்பாருங்கள் 1யோவான் 2:20,27).

பரிசுத்தஆவியானவர், தேவபிள்ளைகளை தலைமைதாங்கி நடத்திச்செல்லும் **ஒரு தலைவராகவும் வழிகாட்டியாகவும்** இருக்கிறார். “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்” என்று ரோமர் 8:14இல் நாம் படிக்கிறோம். அவர், நாம் எங்கே போகவேண்டும் என்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறாரோ அவ்வழியை பார்க்க உதவும் ஒரு செல்வாக்குமல்ல, அவ்வழியில் நடக்க பெலனளிக்கும் ஒரு சக்தியுமல்ல. பரிசுத்த ஆவியானவரே நம்மை

கரம்பிடித்து நாம் எவ்வழியில் செல்லவேண்டும் என்று தேவன் நியமித்துள்ளாரோ அவ்வழியில் நம்மை அருமையாக வழிநடத்திச்செல்கிற ஒரு நபராக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து செய்த ஊழியத்தை, மனிதர்கள் செய்யும்படி கட்டளையிடும் அதிகாரம் பெற்றவராக பரிசுத்தஆவியானவர் இருக்கிறார். அப்போஸ்தலர் பவுலையும் அவருடன் ஊழியம் செய்தவர்களையும் குறித்துப் பார்ப்போம்.

> *“அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.” (அப்போஸ்தலர் 16:6-7)*

இங்கே பரிசுத்த ஆவியானவர், பவுலும் அவனோடுள்ளவர்களும் என்ன செய்யவேண்டும் என்று கட்டளையிடுகிற ஒரு நபராகவும், அவர்களால் அடையாளங்கண்டுகொள்ளப்படுகின்ற ஒரு நபராகவும், அவருக்கு அவர்கள் உடனடியாக கீழ்படிகிறதையும் பார்க்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் சபையில் உச்சகட்ட அதிகாரமுடைய ஒரு நபராக, மனிதர்களை அழைத்து அவர்களை ஊழியத்தில் அமர்த்துகிறார். அப்போஸ்தலர் 13:2 இல், “அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.” மேலும் அப்போஸ்தலர் 20:28இல், “ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.” என்றும் எழுதப்பட்டுள்ளது. பரிசுத்தஆவியானவர் மகத்துவமும் இராஜரீகமும் உள்ள ஒரு நபராக நமக்கு முன்பாக காண்பிக்கப்பட்டிருக்கிறார் என்பதை சத்தியத்தை உண்மையாக தேடுகிறவன் சந்தேகமே இல்லாமல் தெளிவாக புரிந்துகொள்வான்.

வேதாகமத்திலிருந்து எடுத்துக்காட்டப்பட்ட வார்த்தைகளிலிருந்து, ஒரு நபரால் மட்டும் செய்யக்கூடிய செயல்களை பரிசுத்தஆவியானவர் செய்கிறார் என்பது ஆதாரப்பூர்வமான உண்மையாகும்.

3. **பரிசுத்தஆவியானவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியமானது ஒரு நபராக இருந்தால் மட்டுமே செய்யக்கூடியதாக இருக்கிறது.**

> *“நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.”*
>
> *(யோவான் 14:16-17)*

சீஷர்களைவிட்டு புறப்பட்டுச்செல்லும் காலம் வந்திருக்கிறது என்பதை கர்த்தர் இயேசு அவர்களுக்கு தெரிவித்தபோது, ஒரு பயங்கரமான தனிமை உணர்வு அவர்களைப் பிடித்துக்கொண்டது. இயேசு அவர்களை தனியே விட்டுச்செல்வதால் ஏற்படப்போகும் தனிமை உணர்வையும் நம்பிக்கையற்ற நிலையையும் சீஷர்கள் யோசித்துப்பார்த்தபோது துக்கம் அவர்கள் இருதயங்களை நிரப்பியது (யோவான் 16:6யை படித்துப்பார்க்கவும்). அவர்களை ஆறுதல் படுத்தும்படி, அவர்களை அவர் ஒருபோதும் தனியாக விடுவதில்லை என்றும் அவர் அவர்களைவிட்டுச் சென்றதும் அவர்களுக்கு பதிலாக அவர்களுக்கு இன்னொரு தேற்றரவாளனை கொடுக்கும்படி பிதாவிடம் வேண்டிக்கொள்ளப்போவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

அவருடைய இடத்தில் வரப்போகிற இன்னொரு தேற்றரவாளன் உணர்வற்ற ஒரு செல்வாக்காகவோ அல்லது ஒரு சக்தியாகவோ இருந்திருந்தால் அப்படிப்பட்ட வார்த்தைகளை இயேசு பயன்படுத்தியிருக்க மாட்டாரே? அதுமட்டுமல்ல, யோவான் 16:7, ‘‘நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்’’ என்று சொல்லி இருக்கும்போது, அவர் அனுப்பப்போகிற அந்த தேற்றரவாளன் எப்படி ஒரு உணர்வற்ற ஈர்ப்பு சக்தியாக – செல்வாக்காக (influence) அல்லது வல்லமையாக இருக்க முடியும்? ஒரு தெய்வீக நபர் பூமியைவிட்டுச் செல்கிறார், அந்த இடத்திற்கு இன்னொரு தெய்வீக நபர் வருகிறார். சீஷர்களின் பிரதிநிதியாக ஒருவர் பிதாவின் சமூகத்தின் முன்பாக செல்லும்போது அவரைப்போன்ற இன்னொருவர் அந்த இடத்தை எடுத்துக்கொள்வதற்காக பூமிக்கு வரவேண்டியது அவசியமாக இருந்தது. இன்னொரு தேற்றரவாளன் வருவார் என்றும் வந்து அவர் நம்மோடு தங்கியிருப்பார் என்று நம் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து சொன்ன வாக்குதத்தமானது இக்காலகட்டத்தில் எல்லாவற்றைப் பார்க்கிலும் மிக உயர்ந்ததும் மிக சிறந்ததுமாக இருக்கிறது. இதுவே வாக்குத்தத்தங்களிலெல்லாம் மிகப்பெரிய பிதாவின் வாக்குதத்தமாக இருக்கிறது (அப் 1:4 யைப் பார்க்கவும்). பரிசுத்த ஆவியானவரின் நாமத்தைக் குறித்து படிக்கும்போது மீண்டும் இதை விரிவாகப் படிக்கப்போகிறோம்.

### 4. ஒரு நபரால் மட்டுமே எடுக்ககூடிய நடவடிக்கைகளை பரிசுத்தஆவியானவர் எடுக்கிறார்

ஏசாயா 63:10 இல், ‘‘அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்’’ என்று படிக்கிறோம். இங்கே, பரிசுத்தஆவியானவர் **விசனப்படுத்தப்பட்டார் (துக்கப்படுத்தப்பட்டார்)** என்றும் பரிசுத்த ஆவியானவர் **அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார்** என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (எபேசியர் 4:30யை ஒப்பிட்டுப்பாருங்கள்). ஒரு நபரால் மட்டுமே, அதாவது அதிகாரமுடைய நபரால் மட்டுமே ‘விரோதமாய் யுத்தம் செய்யமுடியும்’. ஒரு

நபரால் மட்டுமே துக்கப்படுத்தப்படமுடியும். எந்த வசீகர சக்தியையோ அல்லது வல்லமையையோ உங்களால் துக்கப்படுத்த முடியாது.

எபிரேயரில் இவ்வாறு படிக்கிறோம்:

> *தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். (எபிரேயர் 10:29)*

கிருபையின் ஆவியானவர் நிந்திக்கப்பட்டார் (அவமதிக்கப்பட்டார், அலட்சியம் பண்ணப்பட்டார், இகழப்பட்டார்). ஒரு நபரைத்தான் நிந்திக்க முடியுமே தவிர ஒரு செல்வாக்கையோ, ஒரு வல்லமையையோ நிந்திக்க முடியும் என்று எண்ணுவது முட்டாள்தனமாகும்.

அப் 5:3 இல், "பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என்று நாம் படிக்கின்றோம். இங்கே பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய்சொல்லுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நபரிடந்தான் பொய் சொல்லமுடியும், உணர்ச்சியற்ற வேறு எதனிடமும் பொய்சொல்லமுடியாது.

மத்தேயு நற்செய்தி நூலில் இவ்வாறு படிக்கிறோம்:

> *ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தச் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை."*

*மத்தேயு 19:31-32*

இங்கே, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பேசுகிறதை குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு விரோதமாகத்தான் பேசமுடியுமே தவிர மற்ற எதற்கும் விரோதமாக பேசமுடியாது. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இல்லாதிருந்தால் மனுஷ குமாரனும், நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துக்கு விரோதமாக சொல்லப்பட்ட தூஷணத்தைப் பார்க்கிலும் அவருக்கு விரோதமாக பேசுவது அதிக பயங்கரமான பாவமாக இருந்திருக்க முடியாது.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை உறுதிபடுத்தும் நான்கு ஆதாரங்களைப் பார்த்தோம். *(1. தனிப்பட்ட குணங்கள் 2. செயல்கள் 3. ஊழியங்கள் 4. எடுக்கும் நடவடிக்கைகள்).* ஏட்டில் எழுதியபடி நம்மில் அநேகர் இதை நம்பினாலும்,

நமது நடைமுறை மனப்பான்மையானது அப்படி இருக்கிறதா? அவரை ஒரு நபராக நடத்துகிறோமா?

சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு வேதாகம கருத்தரங்கில் பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட குணநலன்களைக் குறித்து உரையாற்றினேன். அக்கூட்டத்தின் இறுதியில், தற்போதுள்ள மிகபாரம்பரியமான சபையில் பலவருடங்களாக அங்கத்தினராக இருந்த ஒரு பெண்மணி என்னிடம் வந்து, ‘‘இதற்கு முன்னதாக பரிசுத்தஆவி ஒரு நபராக இருக்கிறார் என்று நான் சிந்திக்கவே இல்லை’’ என்று சொன்னாள். இச்சத்தியத்தை அறிந்துகொண்ட அக்கிறிஸ்தவ பெண்மணி அதன்பின் சந்தேகமில்லாமல் அடிக்கடி கீழே குறிப்பிடப்பட்ட பாடலை பாடத் துவங்கிவிட்டாள்.

தேவனைத் துதியுங்கள்,
அனைத்து ஆசீர்வாதங்களும் அவரிடமிருந்தே பாய்கிறது.

அவருக்குக் கீழாக இருக்கும்
அனைத்து ஜீவராசிகளே அவரைத் துதியுங்கள்

அவருக்கு மேலாக இருக்கும்
அனைத்து பரலோகசேனைகளே அவரைத் துதியுங்கள்

பிதாவை, குமாரனை, பரிசுத்தஆவியானவரை துதியுங்கள்.

சந்தேகமில்லாமல் அவள் திரும்பத் திரும்ப பாடுகிறாள்.

பிதாவுக்கு மகிமை உண்டாவதாக,
அவருடைய குமாரனுக்கு மகிமை உண்டாவதாக,
பரிசுத்தஆவியானவருக்கு மகிமை உண்டாவதாக.
ஆதியில் இருந்ததுபோல
இப்போதும் எப்போதும் உலகத்தின் இறுதிவரை
மகிமை உண்டாவதாக
ஆமென், ஆமென்.

எனினும், வார்த்தைகளை பாடலாக பாடுவது வேறு, என்ன பாடுகிறோம் என்று அர்த்தத்தை உணர்ந்து பாடுவது வேறு. அச்செய்தியை அவள் கேட்கும்முன்னதாக அவளுடைய விசுவாச கொள்கை என்ன என்று கேள்வி கேட்டிருந்தால், ‘பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரை நம்புகிறேன்’ என்று சொல்லியிருப்பாள். இறையியல் கொள்கையை அறிக்கையிடுவது வேறு, அச்சத்தியத்தை நடைமுறையில் உணர்ந்து வாழ்வது வேறு. இயேசு கிறிஸ்துவைப்போல பரிசுத்தஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்றும் அவரைப்போலவே அவர் அன்பும் ஞானமும் பெலமும் உள்ளவரென்றும், இயேசுகிறிஸ்துவைப் போலவே அவர் உங்களுடைய நம்பிக்கைக்கும் அன்புக்கும் அர்ப்பணிப்புக்கும் தகுதியானவர் என்றும் உண்மையாகவே கருதுகிறீர்களா?

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தைவிட்டு சென்ற பின்னர், அவரைப்போலவே பரிசுத்தஆவியானவரும் சீஷர்களிடம் தனிப்பட்ட ரீதியில் தோழமையோடும் ஐக்கியமாகவும் இருக்கும்படி இவ்வுலகத்திற்கு வந்தார். (யோவான்

14:16-17யைப் பார்க்கவும்). அவர் உங்களிடம் தோழமையோடும் ஐக்கியமாகவும் இருக்கிறாரா? அவரை உங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு வாரமும் சொல்லப்படுகின்ற அப்போஸ்தலரின் ஆசீர்வாத ஜெபத்தை அறிவீர்கள். “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்” (2கொரிந்தியர் 13:14). அதனுடைய முக்கியத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா? பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? பரிசுத்த ஆவியானவரோடு பங்காளியாக இருப்பது என்றால் என்ன என்று தெரியுமா? பரிசுத்த ஆவியானவரோடு தோழமை கொள்வது என்றால் என்ன என்று தெரியுமா? பரிசுத்த ஆவியாவரோடு தனிப்பட்ட முறையில் நெருக்கமான நட்புவைத்திருப்பது என்றால் என்ன என்று தெரியுமா?

ஒரு உண்மையான கிறிஸ்தவனின் விடுதலைக்கான, சந்தோஷத்திற்கான, வல்லமைக்கான, முழுநிறைவுக்கான மொத்த இரகசியமும் பரிசுத்த ஆவியானவரோடுள்ள ஐக்கியத்தில் அமைந்துள்ளது. அவரை எப்போதும் கூடஇருக்கின்ற ஒரு நண்பராக உணரவேண்டும் என்றால் உங்களுடைய வாழ்க்கையிலுள்ள அனைத்து துறைகளையும் - பகுதிகளையும் முழுமையாக அவரிடம் அற்பணிக்கவேண்டும் - இதுவே உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையாகும். தன்னையே நிவாரணபலியாக ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட குணத்தைக் குறித்த கொள்கையை நமக்கு போதித்திருக்கிறார், அது மதக்கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. ஆனால் அவரைக்குறித்த கொள்கையை நம்பினால் மட்டும்போதாது; பரிசுத்த ஆவியானவரைத் தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள வேண்டும். (*Knowing is different from knowing about*). **என்னுடைய நண்பராகிய பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே இம்முழு அத்தியாயத்தின் நோக்கமாகும்.** (பயபக்தியுடன் சொல்ல தேவனே எனக்கு உதவி செய்யும்.)

## அத்தியாயம். 2

# பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகநிலை

கடந்த அத்தியாயத்தில் பரிசுத்தஆவியானவர் ஒரு நபராக இருக்கிறார் என்பதைத் தெளிவாக பார்த்தோம் ஆனால் அவர் எப்படிப்பட்ட நபராக இருக்கிறார்? அவர் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட நபரா அல்லது எல்லையே இல்லாததன்மையை உடைய

ஒரு நபரா? (a finite or an infinite person?). அவர் தேவனாக இருக்கிறாரா? இக்கேள்விகளுக்கும் வேதாகமத்தில் தெளிவான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் தேவத்தன்மையை தெரிவிக்கும் திட்டவட்டமான ஐந்து ஆதாரங்கள் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றன.

**தேவனுக்குரிய நான்கு குணாதியசயங்களில் ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு என வேதாகமம் அறிவிக்கின்றது.**

திட்டவட்டமான தெய்வீக குணங்களாக இருப்பவைகள் எவை? நித்தியத்தன்மை, எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர். இவைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவருக்குரிய குணாதியசங்களாக வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளன. பரிசுத்த ஆவியானவர் **நித்தியமானவர்** என்று எபிரேயர் 9:14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!"

பரிசுத்த ஆவியானவர் **எங்கும் நிறைந்தவர்** (சர்வ வியாபி) என்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேதாகம பகுதிகள் தெரிவிக்கின்றன.

*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். (சங்கீதம் 139:7-10)*

பரிசுத்தஆவியானவர் **எல்லாம் அறிந்தவர்** என்பதை அநேக வேதாகம வசனங்கள் தெரிவிக்கின்றன. உதாரணத்திற்கு சில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். (1கொரிந்தியர் 2:10-11)*

*என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:16)*

*இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள்*

*யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:12-13)*

பரிசுத்த ஆவியானவர் **சர்வ வல்லமையுடையவர்** என்று லூக்கா 1:35இல் கூறப்பட்டுள்ளது.

*தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

**பரிசுத்த ஆவியானவர் மூன்று திட்டவட்டமான தெய்வீக செயல்களை செய்கிறவர் என குறிப்பிடப்பட்டுள்ளது**.

தேவனையும் அவருடைய கிரியைகளையும் நாம் நினைத்துப்பார்க்கும் போது முதலாவதாக அவருடைய சிருஷ்டிப்பின் செயலைக் குறித்தே எப்போதும் நினைக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் **சிருஷ்டிக்கும் தன்மை உடையவர்** என்று வேதாகமம் கூறுகிறது. யோபு 33:4 இல், ‘‘தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது.’’ என்று படிக்கிறோம். மறுபடியும் சங்கீதம் 104:30 இல், ‘‘நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்’’ என்று படிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் சிருஷ்டிப்பின் செயலைக் குறித்து ஆதியாகமத்திலுள்ள முதலாம் அதிகாரத்தில் முதல் மூன்று வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதியாகமம் 1:1-3).

பரிசுத்த ஆவியானர் **ஜீவனை பகிர்ந்தளிக்கும் ஒரு தெய்வீமான செயலை செய்கிறவர்** என்று வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. யோவான் 6:63 இல், ‘‘ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.’’ மேலும் ரோமர் 8:11 இல், ‘‘அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.’’ ஆதியாகமம் 2:7 இல், மனிதன் உருவாக்கப்பட்ட விதத்தை விளக்கும்போது, தேவனுடைய சுவாசமாக இருக்கிற பரிசுத்த ஆவியானவர் மனிதனுக்கு ஜீவனை பகிர்ந்தளித்தபோது அவன் ஜீவாத்துமாவானான். வேதாகமத்தில் சொல்லப்பட்ட சரியான வார்த்தைகளைப் பார்ப்போம், ‘‘தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.’’ ஆதியாகமம் 2:7 இல் பரிசுத்தஆவியானர் என்று ஒரு நபராக வேறுபடுத்தி தெளிவாக காட்டப்படாமலிருந்தாலும் கிரேக்கமொழியில் ஆவி என்ற பதத்திற்கு ‘சுவாசம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பார்க்கும்போது பரிசுத்தஆவியானவரையே குறிப்பிடுகிறது என்பதை நாம் வியாக்கியானம் செய்து கொள்ளலாம். பரிசுத்தஆவியானவர் **தெய்வீக தீர்க்கதரிசனங்களுக்கும் அதிகாரமுடையவர்** என்று 2பேதுரு 1:21 இல் குறிப்பிடப்பட்டுள்ளது, ‘‘தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.’’ என்று நாம் படிக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில்கூட பரிசுத்தஆவியானவர்தான் தீர்க்கதரிசனத்திற்கு ஆதாரமாக இருக்கிறார் என்று 2சாமுவேல் 23:2-3 இல் சொல்லப்பட்டுள்ளது.

*கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என் நாவில் இருந்தது. இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார்.*

ஆகவே, சிருஷ்டிப்பது, ஜீவனை பகிர்ந்தளிப்பது, தீர்க்கதரிசனம் பேசுதல் ஆகிய தெய்வீகத்தன்மையுள்ள திட்டவட்டமான மூன்று கிரியைகளும் (செயல்களும்) பரிசுத்த ஆவியானவருக்கே உரியதாக சொல்லப்பட்டிருக்கிறது.

**பழைய ஏற்பாட்டில் வருகின்ற கர்த்தர் அல்லது யெகோவா என்ற பதங்களானது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க ரீதியில் பரிசுத்தஆவியானவருக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, புதியஏற்பாட்டின் கண்ணோட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் தெய்வீக நிலையிலுள்ளவராக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்**.

ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய தெளிவான எடுத்துக்காட்டு ஒன்று ஏசாயாவிலும் இன்னொன்று அப்போஸ்தலரின் நடபடிகளிலும் காணப்படுகின்றது.

*அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.*

*அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார். (ஏசாயா 6:5, 9-10)*

5வது வசனத்தில் ஏசாயா கண்டதும் அவனோடு பேசுகின்றவரும் 'யெகோவா' வாக இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் எங்கெல்லாம் ஆங்கில வேதாகமத்தில் 'கர்த்தர்' என்ற வார்த்தையானது பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அது எபிரேய வார்த்தையில் சொல்லப்பட்ட 'யெகோவா'வையே குறிக்கும். இதே நிகழ்ச்சியானது அப்போஸ்தலர் நடபடிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏசாயாவின் கூற்றுபடி, யேகோவா பேசுகிறார், அப்போஸ்தலர் நடபடிகளின் கூற்றுபடி பேசுகிறவர் பரிசுத்தஆவியானவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது: நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். இவர்கள் கண்களினால் காணமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது; காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா*

*தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார். (அப்போஸ்தலர் 28:25-27)*

பழைய ஏற்பாட்டில் யெகோவா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே பரிசுத்தஆவியானவர் யெகேவாவோடு அடையாளங்காட்டப்படுகிறார். யோவான் 12:36-41 இல் ஏசாயாவில் சொல்லப்பட்ட அதே வேதாகமப்பகுதியானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆனால் இதில் இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுவதாக இருப்பது சிறப்பாக கவனிக்க வேண்டியதாக இருக்கிறது (41வது வசனத்தைப் படித்துப்பாருங்கள்). வேதாகமத்தில் பல்வேறு பகுதிகளைப் பார்க்கும்போது யெகோவா என்று குறிப்பிடப்பட்டவர், பரிசுத்த ஆவியானவர் என்றும் இயேசு கிறிஸ்து என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ‘‘ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.’’ என்று ஏசாயா 6:3 இல் மும்முறையாக சொல்லப்பட்ட பரிசுத்தர் என்பதற்கான விளக்கத்தை அங்கே நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. சேனைகளின் கர்த்தரின் திரித்துவமானது திட்டமும் தெளிவுமாக வெளிப்படுத்தப்பட்டபடியினால் அத்தரிசனத்தில் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று மும்முறை சொல்லப்பட்டிருக்கிறது. சேனைகளின் கர்த்தர் திரித்துவமுடையவர் என்பது மீண்டும் ஏசாயா 6:8இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ‘‘பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் **நமது** காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.’’

பளிச்சென்று காணக்கூடிய இன்னொரு ஏடுத்துக்காட்டானது யாத்திராகமம் 16:7 இல் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் யெகோவா என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளவர், புதிய ஏற்பாட்டில் பரிசுத்தஆவியானவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். ‘‘விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்.’’ இங்கே இஸ்ரவேலர் யெகோவாவுக்கு எதிராக முறுமுறுத்ததாக தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எபிரேயர் 3:7-9 இல் சொல்லப்பட்ட வசனங்களில்,

> ‘‘*ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள்.*’’

யெகோவாவுக்கு எதிரான முறுமுறுப்பு என்று மோசேயால் யாத்திராகம புத்தகத்தில் சொல்லப்பட்டது எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான முறுமுறுப்பு என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. ஆகவே சந்தேகத்துக்கே இடமில்லாமல் புதிய ஏற்பாட்டில் யெகோவாவின் இடத்தை (அல்லது தேவத்தன்மையை) பரிசுத்த ஆவியானவர் பொறுப்பெடுத்துள்ளார். (சங்கீதம் 95:8-11 ஒப்பிட்டுப்பாருங்கள்)

**பரிசுத்த ஆவியானவரின் பெயரோடு தேவனுடைய பெயரும் இணைக்கப்பட்டுள்ளதால் ஒரு பரிசுத்தமான, பயபக்தியான சிந்தனையின்றி அவரை எண்ணிப்பார்க்கவும் முடியாது.**

1கொரிந்தியரில் நமக்கு ஒரு எடுத்துக்காட்டு உள்ளது.

> *“வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.” (1கொரிந்தியர் 12:4-6)*

இங்கே தேவனும் கர்த்தரும் ஆவியானவரும் சரிநிகரானவர்களாக ஒன்றாக இணைந்திருப்பதை நாம் கண்டுகொள்ளலாம். இன்னும் மிக பளிச்சென்று தோன்றும் இன்னொரு எடுத்துக்காட்டு மத்தேயு 28:19இல் இருக்கிறது. “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,” பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனோடு இணைக்கப்பட்டவராக இருப்பதால் அவரைப்போல இவரும் முடிவில்லாதவராக, எல்லை இல்லாதவராக இருக்கிறார்.

பளிச்சென்றிருக்கும் இன்னொரு எடுத்துக்காட்டு 2கொரிந்தியர் 13:14இல் காணப்படுகின்றது. “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.” இவ்வசனத்தை நன்றாக தியானிப்பவர்கள் இதன் உண்மையான முக்கியத்துவத்தை புரிந்துகொள்வார்கள்; பரிசுத்தஆவியானவர் ஒரு தெய்வீக நபராக இல்லாமலிருந்தால் பிதாவாகிய தேவனோடு ஐக்கியப்படுத்தி சொல்லப்பட்டிருப்பாரா?

**பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று அழைக்கப்படுகிறார்**

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று அழைக்கப்படுவதினால் அவர் தேவத்தன்மையுடையவர் என்பது இறுதியும் உறுதியுமான ஆதாரமாக இருக்கிறது. இதை அப்போஸ்தலரின் நடபடிகளில் படித்தறியலாம்.

> *“பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாய் இருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.” (அப் 5:3-4)*

இந்த வேதாகபகுதியில் அனனியா பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னான் என்று எழுதப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னதன் மூலமாக மனிதரிடம் அல்ல அவன் தேவனிடமே பொய் சொன்னான் என்று எழுதப்பட்டுள்ளது; இன்னொருவகையில் சொன்னால், தேவன் எனஅழைக்கப்படும் பரிசுத்த ஆவியானவரிடம் அவன் பொய் சொன்னான்.

எல்லாவற்றையும் இரத்தின சுருக்கமாக சொல்வதாக இருந்தால், யெகோவா, கர்த்தர் அல்லது தேவன் என்று பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட நாமமும் தேவனுடைய

கிரியைகளும் புதிய ஏற்பாட்டில் வரும்போது பரிசுத்த ஆவியானவருடைய நாமமாகவும், பரிசுத்த ஆவியானவருடைய கிரியையாகவும் கூறப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் ஒப்பிட்டு, இணைத்துப் பார்க்கும்போதும் தவறிழைக்கமுடியாத இவ்வசனங்களால் பரிசுத்தஆவியானவர் தேவனாக அழைக்கப்படுவதாலும் பரிசுத்த ஆவியானர் ஒரு தெய்வீக நபராக இருக்கிறார் என்று தெளிவாக பறைசாற்றலாம்.

## அத்தியாயம் 3

# பிதாவிடமிருந்தும் அவருடைய குமாரனிடமிருந்தும் பரிசுத்த ஆவியானவர் வேறுபட்ட தனித்தன்மையுடையவராய் இருக்கிறார்.

இதுவரை பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக, ஒரு தெய்வீக நபராக இருக்கிறார் என்பதைப் பார்த்தோம். இப்போது நமக்கு இன்னொரு கேள்வி எழுகிறது: ஒரு தெய்வீக நபராக இருக்கும் அவர் பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் தனித்தன்மையும், விஷேசித்ததன்மை உடையவராக இருக்கிறாரா? புதிய ஏற்பாட்டை கவனமாக ஆராய்ந்து பார்ப்போமானால் அவர் அப்படிப்பட்டவராகத்தான் இருக்கிறார் என்பதை கண்டுகொள்வோம். லூக்கா 3:21-22இல் இப்படிப் படிக்கிறோம்:

> *ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.*

பூமியிலிருக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும், வானத்திலிருந்து ஒருவர் இன்னொருவரிடம் பேசுவதுபோல பேசிய பிதாவாகிய தேவனுக்கும், பிதாவிடமிருந்து (பேசுகிறவர்) புறாவைப்போல் சரீரபிரகாரமாக இறங்கி வந்து குமாரனின் (கேட்கிறவரிடம்) மேல் அமர்ந்த ஆவியானவருக்கும் இடையே மிகத்தெளிவான வேறுபாடு காண்பிக்கப்பட்டுள்ளது. பரிசுத்தஆவியானவர் ஒரு தனிப்பட்ட நபராக வந்து அமர்வது அவருடைய தனித்தன்மையை காண்பிக்கிறது.

மத்தேயு 28:19இல், “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,” பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் தனித்தனி நாமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையேயுள்ள இன்னும் மிகத்தெளிவான வேறுபாடு யோவான் 14:16 காணலாம். “நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.” இங்கே குமாரனாகிய ஒரு நபர், பிதாவாகிய ஒரு நபரிடம் இன்னொரு நபராகிய இன்னொரு தேற்றரவாளனை, இரண்டாம் நபராகிய

குமாரனின் ஜெபத்திற்கு விடையாக அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறார். வார்த்தைக்கு அர்த்தம் உண்டென்றால், வேதாகமத்திலுள்ள வார்த்தைகளுக்கு நிச்சயமாவே அர்த்தம் உண்டு. பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் மூவரும் வெவ்வேறு நபர் என்று சொல்வது தவறாகாது.

மீண்டும் இவர்களுக்கிடையே உள்ள நிச்சயமான வேறுபாட்டை யோவான் 16:7 இல் பார்க்கலாம். “நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.” இங்கே இயேசு பிதாவிடம் வருகிறார், இயேசு இருந்த இடத்திற்கு பரிசுத்தஆவியானவர் பிதாவிடமிருந்து செல்கிறார். இதுபோன்ற ஒரு திட்டவட்டமான வித்தியாசத்தை அப்போஸ்தலர்2:33இல் பார்க்கலாம். **“அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப்பொழிந்தருளினார்.”** என்று படிக்கிறோம். மிகவும் தெளிவான வேறுபாட்டை நாம் இதில் காணலாம். தேவனுக்கும், தேவனுடைய வலதுகரத்தினால் உயர்த்தப்பட்டு தேவனுடைய வலதுபக்கத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் குமாரனுக்கும், குமாரன் பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டு சபையில் பொழுந்தருளிய பரிசுத்தஆவியானவரும் இடையே திட்டவட்டமான வேறுபாட்டை நாம் பார்க்கலாம்.

சுருக்கமான சொன்னால் வேதாகமத்தில் மறுபடியும் மறுபடியும் பரிசுத்த ஆவியானவருக்கும், பிதாவுக்கும், குமாரனுக்கும் இடையிலுள்ள மிகத்தெளிவான வித்தியாசத்தை வேதாகமத்தில் காணலாம். இவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர உறவுகொண்ட வெவ்வேறு ஆளத்துவம் (தனிப்பட்ட குணநலன்கள்) கொண்டவர்களாகவும், ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுகிறவர்களாகவும் ஒருவருக்கொருவர் பேசுகிறவர்களாகவும், ஒருவருக்காக இன்னொருவர் பேசுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

## அதிகாரம் 4

# ஆவியானவர், பிதாவுக்கும் குமாரனுக்கும் பணிந்து செயல்படுகிறவராக இருக்கிறார்

பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீக நபராக இருந்தாலும் எல்லாவகையிலும் அவர் பிதாவுக்கு சமமானவரல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோசெயர் 2:9) என்றும், “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” (யோவான் 10:30) என்றும் “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்” (யோவான் 14:9) என்றும் சொல்லக்கூடிய அளவுக்கு இயேசு கிறிஸ்து மெய்யாகவும் முழுமையாகவும் ஒரு தெய்வீக நபராக இருந்தாலும், எல்லா

வகையிலும் பிதாவுக்கு சரிசமமானவர் அல்ல என்றும் அநேகவிதங்களில் அவர் பிதாவுக்கு பணிந்து செயல்படுகிறவராக இருக்கிறார் என்றும் வேதாகமம் நமக்குப் போதிக்கிறது.

அதே போல பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீக நபராக இருந்தாலும் அவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் பணிந்து செயல்படுகிறார் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து இயேசுவின் நாமத்தில் அனுப்பப்பட்டிருக்கிறார் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. இயேசு மிகத்தெளிவாக சீஷர்களுக்கு தெரிவித்தார்:

> *நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான் 14:16)*

யோவான் 15:26 இல் பரிசுத்த ஆவியானவரை, பிதாவினிடத்திலிருந்து இயேசு அனுப்புவதாக நமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ''பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்'' என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை அனுப்பினார் (யோவான் 6:29; 8:29,42); இயேசுகிறிஸ்துவோ பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் என்று கற்றுக்கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் சில பெயர்கள் பிதாவின் பெயரிலிருந்தும் குமாரனின் பெயரிலிருந்தும் வந்திருப்பதால், அவர் இவர்களுக்குக் கீழ்பட்டு செயல்படுகிறார் என்பது உண்மையாகும். ரோமர் 8:9இல், ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல'' என்று படிக்கிறோம். இங்கே பரிசுத்த ஆவியானவருக்கு இரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன, ஒன்று பிதாவோடுள்ள உறவைத்தெரிவிக்கும் ''தேவனுடைய ஆவியானவர்' என்னும் பெயர், இன்னொன்று குமாரனோடுள்ள உறவைத்தெரிவிக்கும் ''கிறிஸ்துவின் ஆவியானவர்'' என்னும் பெயர். ஆர்.வி (RV) என்ற ஆங்கில வேதாகமத்தில் அப் 16:7இல் ''இயேசுவின் ஆவி'' என்று சொல்லப்பட்டிருக்கிறார்.

ஆவியானவர் குமாரனுக்குக் கீழ்பட்டிருக்கிறார் என்பதற்கான இன்னொரு வசனம், அவர் தம் சுயமாக பேசாமல் அவர் கேட்கிற வார்த்தைகளை பேசுகிறார்.

> *''சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' (யோவான் 16:13)*

அதே விதமாக இயேசுவும் தம்மைக்குறித்து சொல்லும்போது, ''என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது'' என்று சொல்கிறார் (யோவான் 7:16; 8:26,40).

பரிசுத்த ஆவியானவர் தம்மை மகிமைப்படுத்தாமல் கிறிஸ்துவையே மகிமைப்படுத்துவது அவர் கிரியையாக இருக்கிறது என்று தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. யோவான் 16:14இல், “அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்” என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். அதுபோலவே கிறிஸ்து தம்முடைய சொந்த மகிமையை நாடாமல் அவரை அனுப்பினவராகிய பிதாவின் மகிமையையே நாடுகிறார். (யோவான் 7:18 பார்க்கவும்).

மேற்குறிப்பிட்ட அனைத்து வேதபகுதிகளிலிருந்தும், பரிசுத்தஆவியானவர், தம்மகத்தே அனைத்து தேவத்தன்மைகளையும் உடையவராக இருந்தும், பிதாவுக்கும் குமாரனுக்கும் கீழ்பட்டவராக இருந்து செயல்படுகிறார் என்பது நிரூபணமாகிவிட்டது. இயேசு தம்முடைய உலகவாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் வாழ்ந்தார், போதித்தார், கிரியை செய்தார் என்பதை பின்னர் படிக்கப்போகிறோம்.

## அத்தியாயம் 5

# பரிசுத்த ஆவியானவர் என்ற நபரையும் அவரது கிரியையும் வெளிப்படுத்தும் பெயர்கள்

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்த ஆவியானவரைக்குறித்து குறைந்தது 25 வெவ்வேறு பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஆழமான அர்த்தமுடையவைகள். இவைகளை கருத்தாக ஆராய்ந்து பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவராகிய நபரையும் கிரியையும் குறித்த ஒரு அற்புதமான வெளிப்பாட்டை நாம் கண்டுகொள்வோம்.

### 1. ஆவியானவர்

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரை குறிப்பிடும் மிக எளிமையான பெயர் ஆவியானவர் என்பதாகும். அவருடைய அநேக பெயர்கள் ஆவி என்ற சொல்லை அடிப்படையாக கொண்டதாக இருக்கிறது. ஆகவே முதலாவதாக இதைக்குறித்து ஆராய்வோம். ஆவி என்பதற்கு “சுவாசம்” அல்லது “காற்று” என்பதே கிரேக்க மற்றும் எபிரேய மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள மூலவார்த்தையின் சரியான அர்த்தங்களாகும். இந்த இரண்டு அர்த்தமுள்ள கருத்துக்களும் பரிசுத்த ஆவியானவருக்கு சூட்டப்பட்ட பெயரில் அடங்கியுள்ளன.

“அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று இயேசு கிறிஸ்து சொன்னதாக **யோவான் 20:22** இல் படிக்கிறோம். இதிலிருந்து தான் ஆவி என்ற வார்த்தைக்கு ‘சுவாசம்’ என்ற கருத்து வந்தது. **ஆதியாகமம் 2:7** இல், “தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.” **“நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்”** என்ற சங்கீதம் 104:30யையும், **யோபு 33:4**இல், “தேவனுடைய ஆவியானவர் என்னை

உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது.'' என்ற வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது இன்னும் தெளிவாக நிரூபணமாகிறது. இவ்வேதபகுதிகளில் வரும் பெயரின் சிறப்புத்தன்மை என்ன? தேவனிடமிருந்து வெளிவந்த சுவாசமானது, அவருடைய உள்ளான ஜீவனே ஒருதனிநபர்போல நமக்குள் வந்து வாசம் செய்கிறது என்று அர்த்தமாகிறது.

நாம் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய உள்ளான ஜீவனே நமக்குள் வந்து வாசம்பண்ணும்படி இடங்கொடுக்கிறோம்; ஏற்றுக்கொள்கிறோம் என்று அர்த்தம். இதை நாம் புரிந்துகொண்டு, இம்மகத்தான எண்ணத்தால் நம் சிந்தையை நிறைந்திருக்கச் செய்வோமானால், அது நம்மை திக்குமுக்காடச்செய்திடும். எல்லையில்லாத அருங்குணங்களும் சிறப்பியல்புகளும் கொண்ட, நாம் தேவன் என்று அழைக்கிற நித்தியமானவரின் முழுஜீவனே நமக்குள் வந்து வாழ்கிறார் என்பது எவ்வளவு பிரமிப்பூட்டக்கூடிய அர்த்தமுள்ளது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது நம் வாழ்க்கையானது எவ்வளவு பெருமிதமும் பயபக்தியும் உள்ள வாழ்க்கையாக மாறிவிடும்.

பரிசுத்த ஆவியானவரை ''காற்று'' என்று கருதும் கருத்தானது கீழே குறிப்பிடப்பட்ட வேதவசனத்திலிருந்து வருகிறது.

> *''மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.'' (யோவான் 3:6-8)*

கிரேக்க மொழியில் வரும் ஒரே வார்த்தையானது ஒரு வேதபகுதியில் ''ஆவி'' என்றும் இன்னொரு வேதபகுதியில் ''காற்று'' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்குறிப்பிட்ட வசனத்தை நாம் இன்னொரு வகையாகவும்கூட மொழிபெயர்த்திருக்கலாம் என்பது போலத் தோன்றுகிறது: ''மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், காற்றினால் பிறப்பது 'காற்றாக' இருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; 'காற்றினால்' பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.'' இப்பெயரின் முழுசிறப்புத்தன்மையையும் பரிசுத்த ஆவியானவரின் (அல்லது பரிசுத்த காற்று) பெயருக்கு பயன்படுத்திப் பார்ப்போமானால் அர்த்தம் ஆழங்காணமுடியாததாக இருக்கும். எனினும் பின்வரும் பகுதியின் மூலமாக கொஞ்சமாவது இதன் அர்த்தத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

**காற்றைப் போலிருக்கும் ஆவியானவர், இராஜரீக ஆளுகை செய்பவர்.**

‘‘காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய்,’’ **யோவான் 3:8**. காற்றுக்கு நீங்கள் கட்டளையிட முடியாது. காற்றானது அதன் இஷ்டப்படி வீசும். அதுபோல பரிசுத்த ஆவியானவர் இராஜரீக ஆளுகை உடையவராக இருப்பதால் அவருக்கு நாம் கட்டளை கொடுக்க முடியாது. ‘‘இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.’’ (1கொரிந்தியர் 12:11). காற்றானது வடக்கிலிருந்து வீசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் எவ்வளவுதான் சத்தமாக, ‘‘காற்றே தெற்கிலிருந்து வீசு’’ என்று சொன்னாலும் அது தொடர்ந்து வடக்கிலிருந்துதான் வீசிக்கொண்டிருக்கும். வீசிக்கொண்டிருக்கும் காற்றை உங்களால் கட்டளையிட்டு கட்டுப்படுத்த முடியாதபோதும் அக்காற்றின் அசைவாடுதலைக்குறித்த விதிகளை உங்களால் கற்றுக்கொள்ள முடியும். அவ்விதிகளுக்குக்கேற்ப நீங்கள் செயல்படுவீர்களானால் அக்காற்றை பயன்படுத்தி உங்கள் வேலைகளை செய்து நிறைவேற்ற முடியும். நீங்கள் காற்றாடி ஆலையை அமைத்து காற்று எத்திசையாக வீசினாலும் அதற்கேற்ப சக்கரங்களைச் சுழலச்செய்து, உங்கள் தானியங்களை அறைத்து மாவாக்கிடவோ அல்லது தண்ணீரை இறைத்து உங்கள் தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சவோ முடியும். பரிசுத்த ஆவியானவருக்கு நாம் கட்டளையிடமுடியாது, அதேவேளையில் அவர் செயல்பாட்டிலுள்ள விதிகள் என்ன என்பதை நம்மால் கற்றுக்கொள்ள முடியும். நம்மை நாமே அவருடைய விதிகளுக்கு உட்படுத்திக்கொண்டு – அவருக்கு இணங்கி எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய பரமசித்தத்திற்கு நமது சித்தத்தை முற்றிலும் அற்பணிப்போமானால், அவருடைய கையில் ஒருகருவியாக இருக்கும் நம்மூலமாக, ராஜரீகம் செய்யும் தேவனின் ஆவியானவர் மகிமையான காரியங்களை செய்திடுவார்.

**ஆவியானவர் கண்ணில் புலப்படாத காற்றைப் போலிருக்கிறார் ஆனால் அவரை உணரமுடியும், அவர் உண்மையானவர், அவர் வல்லமையானவர்.**

காற்றுவீசுவதை நீங்கள் கேட்கிறீர்கள் (**யோவான் 3:8**) ஆனால் காற்றை நீங்கள் ஒருபோதும் காண்பதில்லை. ஆவியானவருடைய சத்தத்தை நீங்கள் கேட்கிறீர்கள் ஆனால் மாமிசக்கண்ணால் அவரை நாம் பார்க்கமுடியாது. யோவான் 3:8 இல் ‘‘சத்தம்’’ என்று சொல்லப்பட்ட வார்த்தையானது இன்னொரு மொழிபெயர்ப்பில் ‘‘குரல்’’ என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. காற்றின் குரலை கேட்பதோடு அதனால் ஏற்பட்ட வல்லமையான விளைவுகளை கண்களால் பார்க்கிறோம். காற்றின் சுவாசத்தை நமது கன்னங்களில் உணருகிறோம்; தூசிகளும் காய்ந்த இலைகளும் காற்றில் அடித்துச் செல்லப்படுவதைப் பார்க்கிறோம். கடலில் பயணம்செய்யும் கப்பல் துறைமுகத்தை நோக்கி விரைந்து வருவதைப் பார்க்கிறோம். ஆனால் காற்றோ காணமுடியாததாக இருக்கிறது. அதே போல ஆவியானவரும் நமது ஆத்மாவில் அசைவாடுவதை உணருகிறோம், அவர் செய்யும் வல்லமையான செய்கைகளை பார்க்கிறோம் ஆனால் அவரையோ நாம் பார்ப்பதில்லை. அவர் கண்களால் பார்க்கமுடியாதவராக இருந்தாலும் அவர் உண்மையானவராக அவருடைய பிரசன்னத்தை நம்மால் உணரமுடியும்.

சிக்காக்கோ நகரிலுள்ள சிக்காக்கோ அவென்யு சபையில் நான் ஒருமுறை ஒரு மணிநேரம் அனுபவித்த பயபக்தியும் மகிமையுமான நேரத்தை என்னால் ஒருபோதும்

மறக்கமுடியாது. இந்திய மாணவர்களோடு சென்று ஊழியம் செய்ய புறப்படும் முன்னதாக டாக்டர் W.W. ஒயிட், பிரிவு உபசாரவிழாவில் பிரசங்கம் செய்தார். எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி திடீரென்று அம்முழுஇடமும் மகிமையான பயபக்திக்குரிய தேவபிரசன்னத்தால் நிறைந்தது. எனக்கு அந்த அனுபவமானது முழுக்க முழுக்க உண்மையானதாக இருந்தது. ஆனால் என் மனதில், "இது அவரைப்பற்றி நினைத்ததால் வந்த சொந்த உணர்வா அல்லது உண்மையாகவே அவருடைய பிரசன்னம் அங்கு வந்திருக்கிறதா?" என்று ஒரு கேள்வி எழுந்தது. கூட்டம் முடிந்ததும் அக்கூட்டம் நடக்கும்போது யாராவது எதாவது சிறப்பான ஒரு வித்தியாசத்தை உணர்ந்தார்களா என்று பல்வேறு நபர்களிடம் நான் விசாரித்தபோது அவர்கள் அனைவரும் அது உண்மைதான் என்பதை அவர்கள் உறுதிபடுத்தினார்கள். அங்கே பரிசுத்தஆவியானவருடைய தோற்றத்தை யாரும் பார்க்க முடியாவிட்டாலும் அவரது 'திக்குமுக்காட செய்யும் மகிமையான பிரசன்னத்தை' மக்களால் உணரமுடிந்தது. வருடங்கள்பல கடந்து விட்டபோதும் அம்மகிமையான ஒருமணிநேர பிரசன்னத்தைக் குறித்து மக்கள் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு முறை, சிக்காக்கோ நகரிலுள்ள என் சொந்த வீட்டில் எனக்கு நெருக்கமான ஒருநண்பரோடு முழங்கால்படியிட்டு ஜெபித்துக்கொண்டிருந்தபோது ஏதோ ஒரு காணமுடியாத பயபக்திக்குரிய பிரசன்னமானது எங்கள் அறைக்குள் நுழைந்ததை உணர்ந்தோம். "அப்பொழுது ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாகக் கடந்தது, என் உடலின் மயிர் சிலிர்த்தது" என்று எலிப்பாஸ் சொன்னதன் அர்த்தத்தை நான் உணர்ந்து கொண்டேன் (யோபு 4:5). என் இதயத்தை பயபக்தியினால் நிறைக்கும் ஜெபநேரமாக இருந்தது.

ஏற்கெனவே உங்களுக்கு கொடுக்கப்பட்ட இரண்டு உதாரணங்கள் உண்டு. நம்மில் எவரும் எப்போதும் பரிசுத்தஆவியானவரைப் பார்த்திருக்க மாட்டோம் ஆனால் அவருடைய பிரசன்னத்தை மறுபடியும் மறுபடியும் மறுபடியும் நாம் தெள்ளத்தெளிவாக உணர்ந்து வருகிறோம். அவருடைய வல்லமையை நாம் கண்டிருக்கிறோம், அவருடைய பிரசன்னமானது சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மைச் சம்பவமாக இருக்கிறது. கண்ணால் காணாத எதையும் நாங்கள் நம்பமாட்டோம் என்று சொல்கிறவர்கள் சிலர் நம்மிடம் உண்டு. அவர்களில் எவரும் காற்றைக் கண்டதில்லை ஆனால் அவர்கள் அனைவரும் காற்று உண்டு என்பதை நம்புகிறார்கள். அவர்கள் காற்றை உணருகிறார்கள், அது வீசுவதால் ஏற்படும் விளைவுகளைப் பார்த்திருக்கிறார்கள். அதேபோல எக்கேள்விகளுக்கும் இடமின்றி, அவருடைய வல்லமையான பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறோம்; அவரது வல்லமையான கிரியைக்கண்டிருக்கிறோம்.

**ஆவியானவர், காற்றைப்போல, புரிந்துகொள்ளமுடியாதவர் (அறிவுக்கு எட்டாதவர்).**

"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினாலும் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்" (யோவான் 3:8). படைக்கப்பட்ட இயற்கையில் காற்றைப்போல அதிகமர்மான எதுவும் இல்லை. அதைவிட பரிசுத்தஆவியானவரின்

செயல்பாடுகள் மிக மிக மர்மமானது. திடீரென்று, எதிர்பாராத விதத்தில் அகன்று பரவியிருக்கும் பலதரப்பட்ட சமுதாயத்தாரின் மத்தியில் அவர் வல்லமையான கிரியைகளைச் செய்யத் தொடங்கிவிட்டார். அவர் அப்படி கிரியைசெய்வதற்கு காரணம் மறைந்திருக்கக்கூடும் ஆனால் அக்காரணத்தை நம்மால் முழுமையாக கண்டுபிடிக்கமுடியாது. அவர் எங்கிருந்து வருகிறார் எங்கே போகிறார் என்பதை நாம் அறியோம். அடுத்து எந்த இடத்தில் அவரது வல்லமையும் கிருபையும் உள்ள கிரியை அவர் வெளிப்படுத்தப்போகிறார் என்பதை நம்மால் சொல்ல முடியாது.

**ஆவியானவர், காற்றைப்போல, இன்றியமையாதவர்**

காற்று இல்லாவிட்டால் அதாவது 'காற்று வீசாவிட்டால்' உயிரினமே இல்லை. ஆகவேதான் இயேசு சொன்னார், "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (**யோவான் 3:5**). காற்றானது ஒரு மணிநேரம் வீசுவதை நிறுத்தினால் பூமியிலுள்ள பெரும்பாலான உயிரினங்கள் அழிந்துபோகும். அமெரிக்க ஐக்கியநாடுகளிலுள்ள நகரங்களின் சுகாதாரநிலையைக்குறித்து ஆண்டுதோறும் செய்தி வெளியிடுவார்கள். அமெரிக்க நாட்டிலேயே மிகசுகாதாரமான நகரம் என அறிவிக்கப்பட்ட ஐந்து நகரங்களும் (கிரேட் லேக்) மகாஏரியைச் சுற்றியுள்ள நகரங்களாக இருக்கிறது. அந்நகரங்களை பார்வையிடச்சென்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் ஏனென்றால் அதைவிட அதிக தூய்மையும் அதிக துப்புறவாகவும் இருக்கும் நகரங்கள் பல இருக்கின்றன. எனினும் ஒவ்வொரு வருடமும் இந்நகரங்களே சுகாதாரத்தில் சிறந்தனவாக அறிவிக்கப்படுகின்றன. அதற்கான காரணம் எளிமையானது: அந்த ஏரியிலிருந்து வீசும் காற்றே அந்நகரங்களுக்கு ஜீவனையும் ஆரோக்கியத்தையும் கொண்டுவருகிறது. அதேபோல, எந்த இருதயத்தில், எந்த சபையில், எந்த சமுதாயத்தில் ஆவியானவர் அசைவாடுவதை (காற்று வீசுவதை) நிறுத்தும்போது அங்கே மரணம் நிகழும். ஆனால் ஆவியானவர் ஒரு நபரின் மீது, ஒரு சபையின் மீது அல்லது ஒரு சமுதாயத்தின் மீது தொடர்ச்சியாக வீசிக்கொண்டிருக்கும்போது அங்கே ஆவிக்குரிய ஜீவனும் ஆரோக்கியமும் திரளாக இருக்கும்.

**முன்பு குறிப்பிட்டதைப்போன்று, காற்றைப்போல, ஆவியானவர் ஜீவனைக்கொடுக்கிறார்.**

இத்தகைய கருத்து வேதாகமத்தில் அடிக்கடி வருகிறது. உதாரணமாக, **யோவான்6:63** இல், "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." என்று நாம் படிக்கிறோம். மேலும் **2கொரிந்தியர் 3:6**இல் "எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்று படிக்கிறோம். இக்கருத்தை தியானிப்பதற்கு மிக ஏற்றதாக இருக்கும் வேதபகுதி **எசேக்கியேல் 37:8-10**. (யோவான் 3:5யை ஒப்பிட்டுப்பார்க்கவும்)

> *நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால்மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.*

*அப்பொழுது அவர் என்னைப்பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை; மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார்.*

*எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.*

தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையை வாயினால் அறிக்கையிடும்வரை, தீர்க்கதரிசியினுடைய பார்வையில் இஸ்ரவேலானது, மிகத்திராளாக மிகஉலர்ந்து கிடந்த எலும்புகளாக காட்சியளித்தன (வசனம் 2, 11). தீர்க்கதரிசனம் உரைத்தபோது ஒரு இரைச்சல் உண்டாயிற்று; இதோ அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. அவைகள் மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது. தேவனுடைய ஆவியானது காற்றாக அவர்களுக்குள் சென்றபோது, பின்னர், 'அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய்' நின்றார்கள்.''

ஒரு தனிப்பட்ட விசுவாசியின், ஒரு போதகரின், ஒரு பிரசங்கியாரின், ஒரு சபையின் அனைத்துவகையான உயர்வாழ்வும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையாக இருக்கிறது. உதாரணமாக, நீங்கள் ஒருவரை சந்தித்து பழகுகிறீர்கள். அந்நபரின் பேச்சையும், சுபாவங்களையும் கவனித்தபின்னர், இறுதியில் அந்நபரை விட்டு விலகியிருக்க விரும்புகிறீர்கள், அந்நபரை வெறுக்கிறீர்கள். அந்நபரின் ஆவிக்குரிய வாழ்க்கையானது மரித்துப்போன நிலையில், அழுகிக்கொண்டிருக்கிற நிலையிலுள்ள ஒரு சன்மார்க்கனாக இருக்கிறான். அவனைவிட்டு விரைவாக அகன்று செல்லவிரும்புகிறீர்கள். பலமாதங்களுக்குப் பிறகு மீண்டும் அவனைப் பார்க்கிறீர்கள். அவனிடம் பேசத்தயங்குகிறீர்கள்; அவனை விட்டுபோனால் போதும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் அவனிடம் சும்மா ஒப்புக்கு பேசுகிறீர்கள், ஆனால் அவன் உங்களிடம் அதிகமாக பேசும் முன்னதாகவே அவனிடம் ஏற்பட்டிருக்கும் ஒரு மகிமையான மாற்றத்தை காண்கிறீர்கள். அவனுடைய உரையாடலானது இனிமையாகவும் ஆரோக்கியமாகவும் உற்சாகம் ஊட்டுவதாகவும் இருக்கிறது. அவன் நடந்துகொள்ளும்விதம் கவர்ந்திழுப்பதாகவும் மனமகிழ்ச்சி தருவதாகவும் இருக்கிறது. அம்மனிதனின் முழுநடவடிக்கையும் நடத்தையும் வாழ்க்கையும் மறுரூபமடைந்திருப்பதை விரைவில் கண்டுகொள்கிறீர்கள். இனி ஒருபோதும் அந்நபர் ஒரு அழுகிக்கொண்டிருக்கும் பிணமல்ல, அவர் இப்போது தேவனுடைய ஒரு உயிருள்ள பிள்ளையாக இருக்கிறார். என்ன நடந்தது? தேவனுடைய காற்றானது அவன்மீது வீசியிருக்கிறது; அவன் பரிசுத்த காற்றாகிய பரிசுத்த ஆவியானவரை பெற்றிருக்கிறான்.

ஒரு அமைதியான ஓய்வுநாளில் ஒரு சபைக்குச் செல்கிறீர்கள். அச்சபையின் வெளிப்புற தோற்றமும் பிரகாரியங்கள் எல்லாம் நன்றாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கிறது. அந்த வீடானது அனைவரும் கூடிவருவதற்கு மிகவும் கவர்ந்திழுப்பதாக இருக்கிறது. அங்கே ஒரு விலையுயர்ந்த இசைக்கருவி இருக்கிறது, பாடும்வரம்பெற்ற

பாடல் குழுவினர் இருக்கிறார்கள், வேதபண்டிதரைப்போல உரையாற்றும் ஒரு பிரசங்கியார் இருக்கிறார். ஆராதனையானது நன்றாக ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது, ஆனால் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட கொஞ்ச நேரத்திற்குள்ளாக அங்கே ஒரு ஜீவனில்லை என்பதைக் கண்டுகொள்கிறீர்கள். சரீரத்தைப்போல் எல்லா அமைப்பும் நன்றாக இருக்கிறது ஆனால் உண்மையில் அங்கே தேவனுக்காகவோ மனிதனுக்காகவோ பயனுள்ள எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஒரு கனத்த இருதயத்தோடு அங்கிருந்து வெளியேறுகிறீர்கள். பலமாதங்கள் கழித்து மீண்டும் அச்சபைக்கு செல்லும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. வெளித்தோற்றமெல்லாம் முன்னைப் போலத்தான் இருக்கிறது. ஆராதனை நடந்து கொண்டிருக்கும்போதே ஒரு பெரிய மாற்றத்தை கண்டுகொள்கிறீர்கள். அவர்கள் பாடும் பாட்டில் ஒரு புதிய வல்லமை; ஜெபிக்கும் போது ஒரு புதியஆவி; பிரசங்கத்தில் ஒரு புதியபிடிப்பு; இப்போது அச்சபையின் எல்லாகாரியங்களும் தேவபிரசன்னத்தினால் உயிரோட்டம் நிறைந்து காணப்படுகிறது. என்ன நிகழ்ந்தது? தேவனுடைய ஜீவனுள்ள காற்றானது அச்சபையில் மேல் அசைவாடியிருக்கிறது, பரிசுத்த காற்றாகிய பரிசுத்த ஆவியானவர் அங்கே வந்திருக்கிறார்.

திறமையான பிரசங்கி என்று மிகவும் பாராட்டிப்பேசப்பட்ட ஒருவரின் செய்தியை கேட்க ஒருமுறை சென்றிருக்கிறீர்கள். அவர் பிரசங்கம் பண்ண வந்தஉடனே, இவரைக்குறித்து சொல்லப்பட்ட அனைத்து பாராட்டும் அவருடைய அறிவுத்திறனுக்காகவும் வாக்குவன்மைக்காகத்தான் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். அவருடைய பிரசங்கத்தில் அப்பழுக்கற்ற மொழிவளமும், அவர் பேசும்விதத்தின் அழகும், குற்றஞ்சாட்டமுடியாத தர்க்கரீதியான பேச்சும், விமர்ச்சிக்கமுடியாத அவருடைய பழமைவாதமும் இருந்தது. கேட்கக்கூடிய அளவுக்கு அறிவுக்கு நல்ல விருந்தாக இருந்தது. எல்லாமிருந்தும் அவர் பிரசங்கத்தில் ஏதோ முக்கியமான ஒன்று இல்லாததததை உணர்ந்து உங்களுக்குள்ளே எழும் ஒரு ஆவிக்குரிய வேதனையை உங்களால் தவிர்க்கமுடியவில்லை. ஏனென்றால் பிரசங்கத்தில் ஒரு பிடிப்பு இல்லை, ஒரு உண்மையான வல்லமையில்லை, அம்மனிதனின் பிரசங்கத்தில் எவ்விதமான ஒரு உண்மைத்தன்மையினையும் உணரமுடியவில்லை. இம்மகத்தான அறிவாற்றல் வீணாவதைப் பார்த்து ஒரு கனத்த இருதயத்தோடு அங்கிருந்து வெளியேறுகிறீர்கள். மாதங்கள் அல்லது வருடங்கள் பல கடந்துவிட்டபின்னர், பாராட்டப்பட்ட அந்த பிரசங்கியாரின் பிரசங்கத்தை மறுபடியும் கேட்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது, ஆனால் எவ்வளவு மாற்றம்! அதே மொழிவளம், அதே அழகான பேச்சுத்திறமை, அதே திறன்கொண்ட குரல்வளம், யாரும் எதிர்த்துபேசமுடியாத அதே தர்க்கரீதியான சாமார்த்தியம், ஆனால் அதோடு ஏதோ ஒன்று கூடுதலாக சேர்ந்துள்ளதே! இப்போதுள்ள பிரசங்கத்தில், ஒரு உண்மைத்தன்மை இருக்கிறது, ஜீவனிருக்கிறது, ஒரு பிடிப்பு, ஒரு வல்லமை இருக்கிறது. ஆண்களும் பெண்களும் அவர் பேசும்போது அசையாமல் கேட்கிறார்கள், பாவிகள் பிரசங்கத்தைக் கேட்டு பாவஉணர்வடைந்து அவர்களுடைய இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக தலைகுனிந்து கண்ணீர்வடிக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் அவர்களுடைய சுயநலத்தையும் பாவத்தையும் அவர்களுடைய உலகநேசத்தையும் வேண்டாம் என்று உதறித்தள்ளிவிட்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் சமூகத்தில் வாழ்க்கையை சமர்ப்பித்துவிடுகின்றனர்.

என்ன நிகழ்ந்தது? தேவனுடைய காற்றானது அப்பிரசங்கியார் மீது அசைவாடியிருக்கிறது. அவர் பரிசுத்த காற்றால் நிரப்பப்பட்டிருக்கிறார்.

**காற்றைப்போல, பரிசுத்த ஆவியானவரை தடுத்துநிறுத்தமுடியாது.**

அப்போஸ்தலர் 1:8இல் இவ்வாறு நாம் படிக்கிறோம்,

> *பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

நமது கர்த்தருடைய வாக்குதத்தமானது ஸ்தேவானில் நிறைவேறியபோது, நாம் **அப்6:10**இல், "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" என்று படிக்கிறோம். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு மனிதன் ஒரு புயல்காற்றாக மறுரூபமாக்கப்பட்டிருக்கிறான். காற்றை எதிர்த்து எது நிற்க முடியும்? பலவருடங்களுக்கு முன்பு ஒரு புயல்காற்று மினஸ்சோட்டாவிலுள்ள செயின்ட் கிளவுட் பகுதிக்கு வந்தபோது பலத்த சுழல்காற்றானது பாரம் ஏற்றப்பட்ட வாகனங்களையும் சாலையைவிட்டு தூக்கி அப்புறப்படுத்தியது. இரும்பினால் அமைக்கப்பட்டிருந்து பாலத்தை அப்படியே அஸ்திபாரத்திலிருந்து வளைத்து நொறுக்கி தூக்கியெறிந்துவிட்டது. பின்னர் வந்த இன்னொரு புயற்காற்றில், மிஸ்சௌரியிலுள்ள, செயின்ட் லூயிசில், ஒரு அடி கனமுள்ள ஒரு தொலைபேசிக்கம்பத்தை அப்படியே ஒரு சாதாரண குழாயைப்போல துண்டித்துவிட்டது. பிரமாண்டமான மரங்களை வேரோடு துண்டித்துப்போட்டது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியை கூர்மையான கத்தியால் வெட்டிப்போட்டதுபோல சேதப்படுத்தி அப்புயல்காற்று கடந்து சென்றிருந்தது. அந்த சுழற்காற்றிற்கு முன்பாக எதுவும் நிற்கமுடியாது, அதேபோல பரிசுத்தஆவியானவரால் நிரப்பப்பட்ட ஒரு பிரசங்கியாரின் வார்த்தைக்கு முன்பாக எதுவும் நிற்க முடியாது.

அவனுடைய ஞானத்தையும் அவனை பேசவைத்த ஆவியானவரையும் எதிர்த்து நிற்க ஒருவராலும் முடியவில்லை. சார்லஸ் ஜி. ஃபின்னி என்ற பலர்அறியாத ஒரு நகர்புறத்து வழக்கறிஞரை பரிசுத்த காற்றானவர் எடுத்து அவரை நியூயார்க் நகர்வழியாக அனுப்பினார், பின்னர் புதிய இங்கிலாந்து வழியாகவும் அதன்பின் இங்கிலாந்து வழியாகவும் நடத்திச்சென்றார். ஆவியானவர் கொடுத்த எவரும் எதிர்த்துநிற்க முடியாத ஞானத்தால், புல்வெட்டும் கருவி ஒரே நேரத்தில் புற்களை சர்வசாதாரணமாக வெட்டித்தள்ளுவதைப்போல பலவான்களை பணிந்துபோகச்செய்தார். பல இருபதுகளுக்கு மேலான (scores) வழக்கறிஞர்கள் ஆலயஇருக்கையைவிட்டு எழுந்து ஓரமாகவந்து வரிசை வரிசையாக தலைகுனிந்து பணிந்துகொண்டு அவர்களுடைய வாழ்க்கைகளை தேவனிடம் சமர்ப்பித்தார்கள்.

தேவனுடைய காற்றானவர், சிக்காக்கோ நகரத்திலிருந்து ஒரு படிக்காத, வியாபாரம் செய்துகொண்டிருந்த வாலிபனான டி.எல்.மூடியை ஆட்கொண்டார். எதிர்த்து நிற்கமுடியாத இப்பரிசுத்த காற்றின் வல்லமைக்குள்ளான அவருடைய வார்த்தைகளின் முன்பாக புருஷர்களும், ஸ்திரீகளும், வாலிப வயதினரும் வெட்டிசாய்க்கப்பட்டவர்களாக, தாழ்மையோடு பாவஅறிக்கைசெய்து பாவங்களை உதறித்தள்ளும்படி இயேசுகிறிஸ்துவின்

பாதத்தில் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் அன்றைய தினத்திலிருந்து அவர்கள் கிரேட்பிரிட்டன் சபைகளில் தூண்களாக இருந்து வருகிறார்கள். இந்நாளின் மகாபெரிய தேவை என்னவென்றால், தனிநபர்களின் மீதும். சபைகளின் மீதும், பிரசங்கிகளின் மீதும் தேவனுடைய காற்றானது வீசவேண்டும்.

**யோவான் 3:5**இல், "இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." "ஆவியினால்" என்றால் "காற்றினால்" என்று அர்த்தம் என்பதை மனதில் கொண்டால் இந்த வசனத்தில் தெளிவில்லாத அநேகருக்கு தெளிவு உண்டாகும். "ஒரு மனிதன் ஜலத்தினாலும் காற்றினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்பது எழுத்தின்படியே உள்ள மொழிபெயர்ப்பாகும். "ஒரு மனிதன் ஆவியானவரின் தூய்மைப்படுத்துகின்ற, உயிர்பிக்கின்ற வல்லமையால் பிறவாவிட்டால்" என்ற கருத்தைத் தருவதைப்போலத் தோன்றுகிறது. (கழுவி சுத்திகரிக்கும் வார்த்தை – **யோவான் 15:3; எபேசியர் 5:26; யாக்கோபு 1:18**; **1பேதுரு 1:23** – பரிசுத்த ஆவியானவரின் உயிர்ப்பிக்கும் வல்லமை).

## 2. தேவனுடைய ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆவி என்று அடிக்கடி வேதாகமத்தில் சொல்லப்படுகிறார். எடுத்துக்காட்டாக, "நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (**1கொரி 3:16**). இப்பெயரிலும் அதே அடிப்படையான சிந்தனை இருந்தாலும் முந்தின பெயரைவிட இப்பெயரில் அவர் தெய்வீகத்தன்மையும், இயல்பும், வல்லமையும் உடையவர் என்பதை முக்கியப்படுத்தும்படி பெயரோடு தேவனுடைய என்ற பதம் சேர்க்கப்பட்டுள்ளது. முதலாவது பார்த்ததுபோல அவர் வெறுமனே "காற்று" மட்டுமல்ல ஆனால் "தேவனுடைய காற்றாக" இருக்கிறார்.

## 3. யேகோவாவின் ஆவியானவர்
## (கர்த்தருடைய ஆவியானவர்)

பரிசுத்த ஆவியானவரின் பெயரானது **ஏசாயா 11:2**இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்." முந்தின பெயரிலிருந்த அதே கருத்து இப்பெயரில் இருந்தாலும், இங்கு அவர் இஸ்ரவேலரின் உடன்படிக்கையின் தேவன் என அழைக்கப்படுகிறார். வேதாகமமானது தவறில்லாமல் எப்போதும் ஏற்ற தருணத்தில் துல்லியமாக வெவ்வேறு தேவனுடைய பெயரை பயன்படுத்துகிறது. இங்கு ஆவி என்று பேசப்படும்போது அவர் யெகோவாவின் ஆவியோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறாரே தவிர தேவனுடைய ஆவி என்று சொல்லப்படவில்லை.

## 4. கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர்

ஏசாயா 61:1இல் பரிசுத்த ஆவியானவர், கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார்:

> *கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும். . . .*

பரிசுத்த ஆவியானவர் இங்கே கர்த்தருடைய ஆவியானவர் என்று அழைக்கப்படாமல், கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார். அவர் கர்த்தர் (யெகோவா) என்றோ இஸ்ரவேலரின் உடன்படிக்கையின் தேவன் என்றோ அழைக்கப்படாமல் யெகோவாவும் இஸ்ரவேலரின் கர்த்தர் என்றும் உடன்படிக்கையை காக்கும் தேவன் என்றும் அழைக்கப்படுகிறார். ‘‘தேவனுடைய ஆவியானவர்’’ என்ற பெயரைவிட இப்பெயரானது அதிக விளக்கத்தை தெரிவிப்பதாக இருக்கிறது.

## 5. ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர்
(The Spirit of the Living God)

பரிசுத்த ஆவியானவர், **2கொரிந்தியர் 3:3**இல் ‘‘ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர்’’ என்று அழைக்கப்படுகிறார்.

> *ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.*

இப்பெயரில் இருக்கும் முக்கிய சிறப்புத்தன்மை என்ன? இந்த வசனம் சொல்லப்பட்ட பின்னணியை கருத்தில் கொண்டால் தெளிவாக விளங்கும். தோல்சுருளில் மனிதனால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கும் இருதயங்களாகிய சதையாகிய பலகைகளில் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அப்போஸ்தலராகிய பவுல் தெளிவுபடுத்துகிறார். அவர், தேவனை ஏதோ மூளைஅறிவினால் மட்டும் அறியச்செய்கிறவராக இல்லாமல், நம் நடைமுறை வாழ்க்கையில் அவரை நமது சொந்த அனுபவமாக, சொந்த அனுபவத்தில் அறியச்செய்கிறவராக இருப்பதால்தான் பரிசுத்த ஆவியானவரை ‘‘ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர்’’ என்று அழைக்கப்படுகிறார்.

தேவனை விசுவாசிக்கிற அநேகர், அவர்களுடைய பாரம்பரிய பழமைவாதத்தின்படி தேவனைக்குறித்த அறிவுடையவர்களாக இருக்கிறார்கள், அவர்களைப் பொருத்தவரை தேவன் என்றால் மூளையறிவினால் கற்றுக்கொண்ட இறையியல் கொள்கைக்குட்பட்டவராக இருக்கிறார். ஒரு நபர் எவ்வளவு பழமைவாதியாகவோ பாரம்பரிய பற்றுடையவராக இருந்தாலும் அவர்களது மூளையிலுள்ள இறையியல் அறிவைவிட மிகவும் மேலானவர்

என்ற எண்ணத்தை மனதில் கொண்டுவரச்செய்யும்படி கிரியை செய்கிறவர் பரிசுத்த ஆவியானவராக இருக்கிறார். தேவனை நம்வாழ்வில் ஜீவிக்கிறவராக, நம்மால் அறிந்துகொள்ளக் கூடியவராகவும், அவரோடு நெருக்கமான ஒரு தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ளக் கூடியவராகவும், ஒரு நண்பனைவிடவும் மிக நெருக்கமானவராக இருக்கக் கூடியவராகவும் இருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்தி புரியவைப்பது பரிசுத்த ஆவியாவரின் கிரியையாக இருக்கிறது. உங்களுக்கு இத்தகைய ஒரு நிஜமான தேவன் இருக்கிறாரா? உங்கள் சொந்த வாழ்க்கை அனுபவத்தின் வாயிலாக தேவன் மெய்யானவர் என்பதை உணர்த்தும்படிக்கு, பரிசுத்த ஆவியானவர், ஜீவனுள்ள தேவனின் ஆவியாக இருப்பதால் ஒரு ஜீவிக்கின்ற தேவனை உங்களுக்கு கொடுக்கிறவராகவும் கொடுக்க ஆயத்தமாகவும் இருக்கிறார்.

தேவன் ஒரு காலத்தில் இருந்திருக்கக்கலாம், செயல்பட்டிருக்கலாம், அனைத்தையும் சிருஷ்டித்திருக்கலாம், மோசேயோடும், எலியாவோடும், இயேசுகிறிஸ்துவோடும், அப்போஸ்தலர்களோடும்கூட அவர் பேசியிருக்கலாம், ஆனால் அவர் இப்போது உயிரோடில்லை, செயல்படுவதுமில்லை என்று சொல்கிற நபர்களும் இருக்கின்றனர். அவர் உண்மையில் உயிரோடு இருந்தாலும், அவர் இப்போது இயற்கையின் மீதோ அல்லது மனித சரித்திரத்தின் மீதோ பங்கெடுக்காமல் ஒதுங்கியிருக்கிறார் என்றும், சிலர் அவர் இயற்கையை உருவாக்கி, அவைகள் செயல்படுவதற்கான விதிகளை கொடுத்துவிட்டு அது தானாக ஓடிக்கொண்டிருக்கட்டும் என்று விட்டுவிட்டார் என்றும் சொல்கிறார்கள். அவர் மனிதனை உருவாக்கி அவனுக்கு அநேக திறமைகளைக் கொடுத்து அவனுடைய வாழ்க்கையின் இலக்கை, முடிவை அவனே தீர்மானித்துக்கொண்டு செயல்படட்டும் என்று விட்டுவிட்டார் என்றும் சொல்கிறார்கள். அவர் ஆபிரகாமுடனும் மோசேயுடனும் தாவீதுடனும் ஏசாயாவுடனும் இயேசுவுடனும் அப்போஸ்தலர்களுடனும் பேசினார் ஆனால் அதற்குப் பிறகு அவர் பேசவே இல்லை என்றும் நம்புகிறார்கள். பல்வேறு நபர்களோடு அவர் பேசியதை நாம் வேதாகமத்தில் படிக்கலாம் ஆனால் அவர் இப்போது நம்மோடு பேசுவார் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது என்றும் நம்புகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட மனிதர்களின் அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் மாறாக, இன்றும் வாழ்கிற, பேசுகிற, செயல்படுகிற ஒரு தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவும், அவர் ஆபிரகாமிடமும், மோசேயிடமும், ஏசாயாவிடமும், அப்போஸ்தலர்களிடமும் இயேசுவிடமும் வந்ததுபோல நம் அருகிலும் வர ஆயத்தமாயிருக்கும் தேவனாகவும் இருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்திடவும் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியான, பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்துகொண்டிருக்கிறார். அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திய பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:13), தேவனுடைய சத்தியத்தின் முழுமையான வெளிப்பாடும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும், இன்று புதிய வெளிப்பாடுகளை உணர்த்துவதைவிட, இந்நாளிலும் தேவன் வாழ்கிறார் என்பதையும் அன்று அவர் தெரிந்துகொண்ட தம்முடையவர்களோடு பேசியதுபோல் நம்மோடும் நேரடியாக இன்றும் பேசுகிறார் என்பதை உணர்த்துகிறவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர், ஜீவனுள்ள தேவனுடைய ஆவியாயிருக்கிறார் என்பதை அறிந்த மனிதன் பாக்கியவான், அவன் மகிழ்ச்சியாக இருப்பான், ஏனென்றால் இந்நாளிலும் ஜீவிக்கிற ஒரு மெய்யான தேவன்

அவனுக்கு உண்டு; இந்நாளிலும் அவன் காரியங்களை அவனுக்காக பொறுப்பெடுத்துசெய்யவதற்கும் சார்ந்துகொள்ளவதற்கும் ஒரு தேவன் அவனுக்கு உண்டு; தனிப்பட்டவிதத்தில் நெருங்கிப்பழகி ஐக்கியங்கொண்டு மகிழ்ந்திட ஒரு தேவன் உண்டு; அவனது சத்தத்தை உயர்த்தி ஜெபவிண்ணப்பம் சொல்லவும், அதைக்கேட்டு பதில்பேசுகிற ஒரு ஜீவனுள்ள தேவன் அவனுக்கு உண்டு.

## 6. கிறிஸ்துவின் ஆவி
## (The Spirit of Christ)

**ரோமர் 8:9** தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் ஆவி என்ற அழைக்கப்படுகிறார். கிறிஸ்துவின் ஆவி என்றால் கிறிஸ்துவைப்போன்றவர் என்று அர்த்தமாகாது. பரிசுத்தஆவியானவரின் பெயராக இருப்பதால் அதற்கு அதிகமான அர்த்தம் உண்டு. பரிசுத்த ஆவியானவர் எதற்காக கிறிஸ்துவின் ஆவி என்று அழைக்கப்படுகிறார்? அதற்கு அநேக காரணங்கள் உண்டு:

### ஏனென்றால் அவர் கிறிஸ்துவின் பரிசாக இருக்கிறார்

பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து வந்த பரிசு மட்டுமல்ல, அவருடைய குமாரனிடமிருந்து வந்த பரிசாகவும் இருக்கிறார். **யோவான் 20:22**, ‘‘அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்’’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் சுவாசமாகமாகவும் பிதாவாகிய தேவனுடைய சுவாசமாகவும் இருக்கிறார். கிறிஸ்துவே நம்மேல் ஊதி பரிசுத்த ஆவியானவரை நமக்கு கடத்திவிடுகிறார்.

**யோவான் 14:15-26** என்ற வேதபகுதியில், இயேசுவின் ஜெபத்தின் விளைவாகவும் விடையாகவும் பிதாவானவர் பரிசுத்த ஆவியை அனுப்பினார் என்று இயேசு நமக்குப் போதிக்கிறார். **அப் 2:33, “**அவர் (இயேசுகிறிஸ்து) தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதை (விசுவாசிகளின்மீது) பொழிந்தருளினார்’’ என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்ட இயேசு, ஜெபித்ததன் பலனாகவும் பதிலாகவும் பிதாவிடமிருந்து பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டு, பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அவருடைய சபையின் மீது பொழிந்தருளினார் என்று இவ்வேதபகுதிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. **மத்தேயு3:11** இல் இயேசுவே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று நாம் படிக்கிறோம். **யோவான் 7:37-39** *37. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். 38. வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். 39. தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும்*

*அருளப்படவில்லை.* மகிமையடைந்த கிறிஸ்துவானவரே பரிசுத்தஆவியானவரை சபைக்குக் கொடுக்கிறார். யோவான் 4:10 “இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.” இவ்வசனத்தில் ஜீவத்தண்ணீராகிய பரிசுத்த ஆவியானவரை கொடுக்கிறவர் இயேசு என்று அவர்தாமே அறிவிக்கின்றார். ஆகவே இவ்வேதவசனங்களிலிருந்து கிறிஸ்துவே பரிசுத்த ஆவியை தருகிறவராக இருப்பதால் இவர், “கிறிஸ்துவின் ஆவி” என்று அழைக்கப்படுகின்றார்.

**பரிசுத்த ஆவியானவர் “கிறிஸ்துவின் ஆவி” என்று அழைக்கப்படுவதற்கு இன்னொரு ஆழமான காரணம் உண்டு – நமக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பிப்பது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது**

**யோவான் 16:14** “அவர் (பரிசுத்த ஆவியானவர்) என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.” இதே விதத்தில், **யோவான்15:26** லிலும் சொல்லியிருக்கிறார்: “பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.” மனிதர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுப்பதும் கிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பிப்பதும் பரிசுத்தஆவியானவரின் வேலையாக இருக்கிறது. இப்படி கிறிஸ்துவை வெளிப்படுத்துவதால் இவர் “கிறிஸ்துவின் ஆவி” என்று அழைக்கப்படுகிறார்.

**பரிசுத்த ஆவியானவர் “கிறிஸ்துவின் ஆவி” என்று அழைக்கப்படுவதற்கு இன்னும் ஒரு ஆழமான காரணம் உண்டு – நமக்குள் கிறிஸ்துவின் பிரசன்னத்தை உருவாக்குவது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது.**

> அப்போஸ்தலர் பவுல் பிதாவிடம் வேண்டிக்கொள்ளும் ஜெபம். **எபேசியர்3:16-17:** “நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி…”

கிறிஸ்துவை நம் இதயத்திற்குள் வாசமாயிருக்கச் செய்து, நமக்குள் ஜீவனுள்ள கிறிஸ்துவை உருவாக்குகிறது பரிசுத்தஆவியானவரின் வேலையாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் எழுத்தின்படியே கன்னியாகிய மரியாளின் கருப்பைக்குள் மாம்சசாயலில் இயேசுகிறிஸ்துவை உருவாக்கியதுபோல (**லூக்கா 1:35**), இந்நாளில் பரிசுத்த ஆவியானவர், உண்மையாகவே, நம் இதயத்திற்குள் ஆவிக்குரிய சாயலில் இயேசு கிறிஸ்துவை உருவாக்குகிறார். பரிசுத்தஆவியானவர் வரும்போது அவர்தாமே வருவதாக இயேசுகிறிஸ்து சீஷர்களிடம் சொன்னார். அவர்களுடைய இதயத்திற்குள்ளாக பரிசுத்த ஆவியானவர் வரும்போது கிறிஸ்துதாமே வருவார் என்று அர்த்தப்படுத்தியுள்ளார்.

> *16. நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு*

*தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். 17. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். 18. நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன். (யோவான் 14:16-18)*

ஜீவிக்கின்ற கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியின் வல்லமையால், கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியின் இதயத்திற்குள்ளும் உருவாக்கப்படுவது பாக்கியமாக இருக்கிறது. ஆகவே பரிசுத்த ஆவியானவர் நம் இதயத்திற்குள் கிறிஸ்துவை உருவாக்குவதால் கிறிஸ்துவின் ஆவி என்று அழைக்கப்படுகிறார். என்ன அற்புதம்! அவர் பெயரில் இருக்கும் முக்கியத்துவம் என்ன மகிமையாயிருக்கிறது என்பதை நாம் நன்றாக தியானித்து புரிந்துகொள்ளுவோம். எவ்வளவு புரிந்துகொள்கிறோமோ அந்த அளவுக்கு இப்பெயரில் இருக்கும் மகிமையை உணர்ந்து களிகூறுவோம்.

## 7. இயேசு கிறிஸ்துவின் ஆவி
(The Spirit of Jesus Christ)

**பிலிப்பியர் 1:19:** “அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்.’’ இவர் நித்திய வார்த்தையின் ஆவி மட்டுமல்ல, மாம்சமாகிய வார்த்தையின் ஆவியாக இருக்கிறார்; இவர் கிறிஸ்துவின் ஆவி மட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவின் ஆவியாக இருக்கிறார். பிதாவின் வலக்கரத்தால் உயர்த்தப்பட்ட மனுஷகுமாரனாகிய இயேசு பிதாவிடமிருந்து ஆவியைப் பெற்று அவரை அனுப்புகிறார். ஆகவே **அப் 2:32-33**இல் இப்படி படிக்கிறோம்:

*இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாய் இருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப்பொழிந்தருளினார்.*

## 8. இயேசுவின் ஆவியானவர்
(The Spirit of Jesus)

**அப் 16:6-7 இல்** பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் ஆவி என்று அழைக்கப்படுகிறார்.

*அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். (ASV என்ற ஆங்கில வேதாகமத்தில் ‘இயேசுவின் ஆவியினால் தடைபண்ணப்பட்டு’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)*

“இயேசுவின் ஆவியானவர்” என்று பயன்படுத்தப்பட்ட இந்த பெயரில் ஆவியானவருக்கும் மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள உறவை முந்தின பெயரைவிட இன்னும் அதிக தெளிவாக இருக்கிறது.

## 9. அவருடைய குமாரனின் ஆவியானவர்
## (The Spirit of His Son)

**கலாத்தியர் 4:6**இல் “மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்” இங்கே பரிசுத்த ஆவியானவர் ‘அவருடைய குமாரனின்ஆவி’ என்று அழைக்கப்படுகிறார். இந்த வசனத்திற்கு முந்திந்திய வசனங்களின் பின்னணியைப் பார்ப்போம்.

> *நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:4-5).*

இங்கே சிறப்பாக ஒரு விசுவாசி தேவனுடைய குமாரனாக இருக்கிறான் என்பதை பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் ஆவியானவர் நமக்குள் தகப்பனை நாடுகின்ற, ஒரு பாசஉணர்வை பொங்கச்செய்கின்ற ஆவியாக (filial Spirit) இருக்கிறார். நாம் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டோமானால், ஏதோ ஒரு நிர்பந்தத்தினாலோ அல்லது ஒரு கொத்தடிமைபோலவோ அவருக்கு சேவை செய்யாமல், அவருடைய குமாரர்களாக இருக்கும் மகிழ்ச்சியான விடுதலையோடு நாம் வாழ்ந்துகொண்டிருப்போம். நான் தேவனைக்கு பயந்து நடுங்கிக் கொண்டிராமல், அவரை நம்பி அவருக்குள் களிகூருவோம். பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக்கொள்ளும்போது நாம் மறுபடியும் பயப்படுவதற்கு நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திசுவிகார ஆவியை பெற்றுக்கொண்டோம் (ரோமர் 8:15). மற்ற பெயர்களைவிடவும் பரிசுத்த ஆவியானவர் என்ற அழைப்பதே மிகச்சிறந்த அறிவுரையாகும். ஆனால் அப்பெயரில் இருக்கும் ஆனந்தமான சிறப்புத்தன்மையை முற்றிலும் உணர்ந்துகொள்ளும் வரை நாம் நன்றாக தியானிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைக்குறித்து ஆராயும்போது இதைக்குறித்து மீண்டும் திருப்பிப்பார்க்கலாம்.

## 10. பரிசுத்த ஆவி
## (The Holy Spirit)

இப்பெயரே அடிக்கடி அதிகமாக பயன்படுத்தப்படுகின்ற பெயராகவும் நம்மில் பெரும்பாலானவர்களுக்கு மிக பழக்கப்பட்ட பெயராகவும் இருக்கிறது. நம் எல்லாருக்கும் அதிக பழக்கப்பட்ட வசனமாக இருக்கும் லூக்கா 11:13 இல் இப்பெயரானது பயன்படுத்தப்பட்டுள்ளது. “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா

என்றார்.'' இப்பெயரானது ஆவியானவரின் அடிப்படையான நீதிநெறியுள்ள குணத்தை முக்கியப்படுத்துகின்றது. அவர் தன்னில்தானே பரிசுத்தமுள்ளவராக இருக்கிறார். இப்பெயரில் இருக்கும் சிறப்புத்தன்மையின் மதிப்பை அறியாமல் அலட்சியம் பண்ணும் அளவுக்கு இப்பெயர் நமக்கு மிகவும் பழக்கப்பட்டதாக இருக்கிறது. அவர் பரிசுத்த ஆவியானவராக இருக்கிறார் என்பதை மட்டும் நாம் தொடர்ச்சியாக, ஆழமாக அறிந்து உணர்ந்து கொண்டோமானால் எவ்வளவு மேன்மையாக இருக்கும்! ஏசாயா தரிசனம் பார்த்தபோது அவருடைய பிரசன்னத்தின் முன்பாக தலையை தாழ்த்தி, ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' (ஏசாயா 6:3) என்று நாமும் சத்திமிடுவோம். ஆனால் நாம் அடிக்கடி சிந்திக்காமலே அவரைப்பற்றி என்னவெல்லாம் பேசுகிறோம் அவருக்காக ஜெபிக்கிறோம். நமது சபைக்குள்ளும் நமது இதயத்திற்குள்ளும் வரும்படி ஜெபிக்கிறோம், அவர் அதற்கிணங்கி வருவாரானால் அங்கே அவர் எதைக் கண்டுகொள்வார்? அவரைத் துக்கப்படுத்துகின்ற வேதனைப்படுத்துகின்ற அதிகமான காரியங்களை கண்டுகொள்வார் அல்லவா?

ஒரு பெரிய நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் தரங்குறைந்த இடத்தில் மிக கேவலமான வாழும் மோசமான பெண்கள், நாங்கள் ஒருபோதும் எங்கள் தீயவாழ்க்கையை மாற்றிக்கொள்ள மாட்டோம் ஆனால் எங்களுடன் வந்த வாழுங்கள் என்று அந்நகரத்திலேயே மிகஒழுக்கமும் பரிசுத்தமாகவும் வாழும் ஒரு பெண்ணை அவர்களோடு தங்கும்படி அழைப்பு விடுத்தால் அவளுக்கு எப்படி இருக்கும்? எங்களது அசுத்த வாழ்க்கைமுறையையோ அல்லது எங்களது சுயநலத்தையோ அல்லது எங்களது உலகப்பற்றையோ அல்லது எங்களது பாவத்தையோ விட்டுவிடுவதற்கு எங்களுக்கு எவ்வித நோக்கமும் கிடையாது ஆனால் பரிசுத்தஆவியானவரே நீர் வந்து எங்கள் இதயத்திற்குள் வாசம் செய்யும் என்று நீங்கள் வேண்டிக்கொள்வதாக இருந்தால் அப்பெண்கள் அழைத்த காரியமும் உங்களுக்கு அதிர்ச்சியூட்ட முடியாது. சபைக்குள் அனைத்து வகையான உலகியல் காரியமும், சுயநலமும், சண்டைசச்சரவும், பொறாமையும் பெருமையும், பரிசுத்தமில்லாத அனைத்தையும் வைத்துக்கொண்டு பரிசுத்த ஆவியானவரை சபைக்குள் அழைப்பது நமக்கு அதிர்ச்சியான காரியமாக இருக்காதா?

எனினும், இருண்ட அறைகளில் மிகத்தரங்குறைந்த மிகவெட்கக்கேடான தீய காரியங்களுக்கு பேர்பெற்ற பகுதியிலுள்ள பெண்கள், மிகபரிசுத்தமான, கிறிஸ்துவின் சாயலை பிரதிபலிக்கும் அப்பெண்ணிடம், நீங்கள் எங்களோடு தங்கியிருக்க வாருங்கள், ஏனென்றால் நாங்கள் எங்கள் மோசமான வாழ்க்கையையும், தீயகாரியங்களையும் விட்டுவிடவேண்டும் என்ற நோக்கத்தோடு இருக்கிறோம், எங்கள் பகுதியிலுள்ள இடத்தின் முழுகட்டுப்பாட்டையும் உங்களுக்குத்தருகிறோம் எங்களுக்கு உதவிசெய்யுங்கள் என்று அவர்கள் அழைத்தால் நிச்சயமாக அந்த பரிசுத்தமான பெண் அங்கே போவாள். எங்கள் ஒவ்வொரு எண்ணத்தையும், கற்பனையையும், உணர்ச்சியையும், நோக்கத்தையும், செயலையும், அவருடைய சித்தத்திற்கு ஒத்துபோகும்படி என்னை முற்றிலும் ஒப்புக்கொடுக்கிறேன், அற்பணிக்கிறேன் என்று சொல்லும்போது நாம் எவ்வளவு பாவமுள்ள சுயநலமுள்ள ஒழுங்கற்ற நிலையிலிருந்தாலும் எல்லையில்லாத பரிசுத்தமுள்ளவர் நம்மிடம் வந்து நம் இதயத்திற்குள் வாசம்பண்ண ஆயத்தமாக இருக்கிறார்.

## 11. வாக்குதத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவி
(The Holy Spirit of Promise)

‘‘நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்’’ என்று எபேசியர் 1:13இல், பரிசுத்தஆவியானவர், வாக்குதத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவி என்று அழைக்கப்படுகிறார். மேற்குறிப்பிட்ட பெயரோடு கூடுதலாக சேர்க்கப்பட்ட ஒரு கருத்து என்னவென்றால், பிதாவாலும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் பெரிதாக வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவி என்பதாகும். நிகழ்காலத்திற்குரிய அனைத்து வாக்குதத்தத்தையும் உள்ளடக்கிய பிதாவின் மிகப்பெரிய வாக்குதத்தமாக பரிசுத்தஆவியானவர் இருக்கிறார். இயேசுகிறிஸ்து எடுத்துக்கொள்ளப்படும்போது, சீஷர்களிடம் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால் அவர்கள் அவருடைய வேலையை செய்யத் துவங்கும் முன்னதாக ‘‘பிதாவின் வாக்குதத்தம்’’ நிறைவேறக் காத்திருங்கள் (அப் 1:4) என்று சொன்னது பரிசுத்த ஆவியைக் குறித்துத்தான்.

கிறிஸ்துவானவர் வரும்வரை பிதா சொன்ன பெரிய வாக்குத்தத்தம் என்னவென்றால் பாவநிவர்த்திசெய்யும்படி இரட்சகரும் ராஜாவும் வரப்போகிறார் என்பதாக இருந்தது. இயேசு வந்தபோது பாவநிவர்த்தி பரிகாரமாக கல்வாரி சிலுவையிலே மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம்நாள் உயிரோடு எழுந்து பிதாவின் வலதுபக்கத்தில் உட்கார்ந்தார். அதன்பிறகு, நடக்கவேண்டிய பிதாவின் இரண்டாவது பெரிய வாக்குதத்தமானது நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டபின் அவருடைய இடத்தை பரிசுத்தஆவியானவர் நிரப்புவார் என்பதே.

## 12. பரிசுத்தத்தின் ஆவியானவர்
(The Spirit of Holiness)

ரோமர் 1:5இல், ‘‘மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி (the Spirit of holiness) தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்’’ என்ற வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர், பரிசுத்தமுள்ள ஆவி என்று அழைக்கப்படுகிறார். மேலோட்டமாகப் பார்த்தால் பரிசுத்த(மான) ஆவிக்கும் பரிசுத்தமுள்ள ஆவிக்கும் இடையே அடிப்படையாக முக்கியமான எவ்வித வேறுபாடும் இல்லாததுபோலத் தோன்றினாலும் குறிப்பிடத்தக்க வித்தியாசமுண்டு. ஏற்கெனவே குறிப்பிட்டது போல பரிசுத்தஆவி என்ற பெயரானது, அடிப்படையான நீதிநெறியுள்ள தனிப்பண்பை, குணத்தை முக்கியப் படுத்துகிறது என்று பார்த்தோம், ஆனால் பரிசுத்தமுள்ள ஆவி என்ற பெயருக்கு அர்த்தம் அவர் தம்மில் தாமே பரிசுத்தமான இருப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு பரிசுத்தத்தை பகிர்ந்தளிக்கிறவராக இருக்கிறார் என்ற எண்ணத்தை கொண்டுவருகிறது. அவரிடமுள்ள அந்த பூரணமான பரிசுத்தத்தை அவரை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கிறார். (1பேதுரு 1:2 வசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்)

## 13. நியாயத்தின் ஆவியானவர்
(The Spirit of Judgement)

ஏசாயா 4:3, ‘‘அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது...’’ என்ற வேதவார்த்தையில் பரிசுத்த ஆவியானவர் நியாயத்தின் ஆவி என்று அழைக்கப்படுகிறார். இந்த வேதபகுதியில் பரிசுத்தஆவியானவருக்கு இரண்டு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது. பாவத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து பாவஉணர்வடையச் செய்வது பரிசுத்தஆவியானவரின் வேலையாக இருப்பதால் அவர் இப்படி அழைக்கப்படுகிறார் (யோவான் 16:7-9 ஒப்பிட்டுப்பாருங்கள்). பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில் வரும்போது அவர் செய்கிற முதல்வேலை தேவன் நமது பாவங்களை எப்படிப்பார்க்கிறாரோ அப்படி நம்முடைய பாவங்களை நாம் பார்க்கும்படி நம்முடைய கண்களை திறக்கவேண்டியதாக இருக்கிறது. அவர் நமது பாவத்தை நியாயந்தீர்க்கிறார். (பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைக்குறித்து படிக்கும்போது யோவான் 16:7-11 வசனங்களை விரிவாகப் பார்க்கலாம்.)

## 14. சுட்டெரிப்பின் ஆவியானவர்
(The Spirit of Burning)

இப்பெயரானது மேலே குறிப்பிடப்பட்ட வேதபகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பெயரானது அவருடைய தேடிப்பார்க்கும் காரியத்தையும், புடமிடுவதையும், குப்பைகளை சுட்டெரிப்பதையும் பிரகாசத்தை கொடுப்பதையும், சக்தியூட்டும் வேலையையும் முக்கியப்படுத்துகிறது. எந்த இதயத்தில் பரிசுத்தஆவியானவர் தங்கியிருக்கிறாரோ அங்கே அவர் ஒரு அக்கினியைப்போல இருக்கிறார். அக்கினி சோதிப்பதுபோல, புடமிடுவதுபோல, அசுத்தங்களை சுட்டெரிப்பதுபோல, பிரகாசத்தைத் தருவதுபோல, சூடாக்குவதுபோல, ஆற்றலூட்டுவதுபோல அவரும் செயல்படுகிறார். பரிசுத்தஆவியானவரின் சுத்தப்படுத்தும் வேலையை இப்பெயரானது முக்கியப்படுத்திக் கூறுகிறது. (ஏசாயா 4:3-4)

## 15. சத்திய ஆவியானவர்
(The Spirit of Truth)

பரிசுத்தஆவியானவர், யோவான் 14:17இல் சத்தியஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார்: ‘‘உலகம் அந்தச் சத்தியஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.’’ (யோவான் 15:26; 16:13 வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்). பரிசுத்தஆவியானவர், சத்திய ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார் ஏனென்றால் அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு சத்தியத்தை

தெரிவிப்பதும் பகிர்ந்துகொடுப்பதும் பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது. யோவான் 16:13, “சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். எல்லா சத்தியமும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருகிறது. அவர் போதிப்பதினால் மட்டுந்தான் நாம் சத்தியத்தை அறிந்துகொள்கிறோம்.

## 16. ஞானத்தையும் உணர்வையும் அருளுகிற ஆவி
(The Spirit of Wisdom and Understanding)

ஏசாயா 11:2இல், “ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.” என்ற வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர் ‘ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி’ என்று அழைக்கப்படுகிறார். இப்பெயரின் சிறப்புத்தன்மையானது எவ்வித விளக்கமும் தேவையில்லாத அளவுக்கு மிகவும் வெளிப்படையாக இருக்கிறது. அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஞானத்தையும் உணர்வையும் பகிர்ந்தளிப்பது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது என்பதை பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளினாலும் சொல்லப்பட்ட சந்தர்ப்ப சூழலினாலும் உண்மையாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக்கொள்கிறவர்கள் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றுக்கொள்கிறார்கள் (2தீமோத் 1:7).

## 17. ஆலோசனையும் பெலனையும் அருளுகிற ஆவி
(The Spirit of Counsel and Might)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேதபகுதியில் இப்பெயரானது பரிசுத்த ஆவியானவருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பெயருக்கான அர்த்தம் தெள்ளத் தெளிவாக உள்ளது. ‘ஆலோசனையும் பெலனையும் அருளும் ஆவி’ என்று பரிசுத்த ஆவியானவர் அழைக்கப்படுகிறார், ஏனென்றால் நமது அனைத்து திட்டங்களிலும் அவரே நமக்கு ஆலோசனையும் அந்த ஆலோசனையை நிறைவேற்றும் பெலனையும் அருளுகிறார். (ஒப்பிட்டுப்பார்க்கவும் அப் 1:8; 8:29; 16:6-7.) நமது அனைத்து திட்டங்களிலும் தேவனுடைய சொந்த ஆலோசனையும், அவருக்காக நாம் எடுக்கும் ஒவ்வொரு காரியங்களிலும் தேவனுடைய பெலனையும் பெற்றுக்கொள்வது நமது பாக்கியமாக இருக்கிறது. ஆலோசனையும் பெலனையும் அருளுகிற ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளுவதால் அவைகளைப் பெற்றுக்கொள்கிறோம்.

## 18. அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவி
(The Spirit of Knowledge and of the Fear of the Lord)

மேலே குறிப்பிட்ட வேதபகுதியாகிய ஏசாயா 11:2 இல் இப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பெயரின் சிறப்புத்தன்னையானது பெயரிலேயே தெளிவாக புலப்படும். நமக்கு அறிவை பகிர்ந்தளிப்பதும், பின்னர் யேகோவா கர்த்தரிடம் ஒரு பயபக்தியை, அவருடைய அனைத்து கட்டளைகளுக்கும் பயபக்தியோடு கீழ்படியவேண்டும் என்ற மரியாதையை நம்மிடம் பிறப்பிக்கச் செய்வதும் பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டவர்களுக்கு கர்த்தருக்கு பயப்படுதல் என்பது உகந்த வாசனையாக இருக்கும் என்று தமிழ்வேதாகமமும், கர்த்தருக்குப் பயப்படுதல் பிரியமானதாக இருக்கும் என்று ஆங்கிலவேதாகமமும் கூறுகிறது (ஏசாயா 11:3). மேலே குறிப்பிட்ட மூன்று பெயர்களும், கர்த்தரின் ஊழியக்காரராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் நடத்திய கிருபையுள்ள வேலைகளாக இருக்கின்றன (ஏசாயா 11:1-5 வசனங்களை பார்க்கவும்).

## 19. ஜீவனுள்ள ஆவி
(The Spirit of Life)

ரோமர் 8:2, ‘‘கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.’’ என்ற வேதவாக்கியத்தில் பரிசுத்தஆவியானவர் ஜீவனுள்ள ஆவி என்று அழைக்கப்படுகிறார். ஜீவனை பகிர்ந்தளிப்பது பரிசுத்தஆவியானவரின் வேலையாக இருப்பதால் அவர் ஜீவனுள்ள ஆவி என்று அழைக்கப்படுகிறார். (ஒப்பிட்டுப்பார்க்கவும் யோவான் 6:63; எசேக்கியேல் 37: 1-10). வெளிப்புறமனிதனை முக்கியப்படுத்துகின்ற மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் உள்புறமனிதனை முக்கியப்படுத்துகின்ற ஜீவனுள்ள ஆவியின் பிரமாணத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை பவுல் ரோமர் 7:6, தெரிவிக்கிறார். வெளிப்புறமாக வரும் பரிசுத்தமும், நீதியும், நன்மையும் உண்மையுள்ளதாக இருந்தாலும் பலவீனமுள்ளதாக இருக்கிறது. ஆனால் ஒரு விசுவாசியின் இருதயத்தில் வாசமாக இருக்கும் ஜீவனுள்ள தேவனுடைய ஆவி அவனுக்குள் ஆவிக்குரியதும் நல்லொழுக்கமுள்ளதுமான வாழ்வை பகிர்ந்து கொடுப்பதோடு தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் தேவைகளை சந்திப்பதற்கு அவனை தகுதிப்படுத்துகின்றது. பலவீன மாம்சத்தின் மூலமாக நியாயப்பிரமாணத்தினால் செய்ய முடியாததை தேவனுடைய ஆவி, விசுவாசிக்கு ஜீவனை பகிர்ந்தளிப்பதோடு அவனுடைய இருதயத்திற்குள் வாசமாயிருந்து அதை செய்யும் ஆற்றலை அவனுக்கு அளிக்கிறார் என்பதை காண்பிப்பதற்காகவே இந்த வித்தியாசத்தை கொண்டுவருகிறார். இவ்வாறாக மாம்சத்தின் பின்னாக நடவாமல் ஆவியின் பின்னாக நடப்பவர்கள் நீதியின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்கள்.

*2. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*
*3. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.*

*4. மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*

*(ரோமர் 8:2-4)*

ஆகவே பரிசுத்த ஆவியானவர் ஜீவனுள்ள ஆவியென்று அழைக்கப்படுகிறார், ஏனென்றால் அவரே அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனையும் அதன் விளைவாக பாவத்தின் மேல் ஜெயத்தையும் பகிர்ந்தளிக்கிறார்.

## 20. ஆனந்த தைலம்
## (The Oil of Gladness)

‘‘நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்….’’ என்ற எபிரேயர் 1:9 வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர் ஆனந்த தைலம் என அழைக்கப்படுகிறார். இந்த வேதபகுதியில் வரும் ‘‘ஆனந்த தைலம்’’ என்பதை பரிசுத்த ஆவியானவரின் ஒரு பெயர் என்று சொல்வதற்கான காரணம் என்ன சிலர் கேள்வி கேட்கக்கூடும். அப்போஸ்தலர் 10:38 மற்றும் லூக்கா 4:18யை எபிரேயர் 1:9வோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பதில் கிடைக்கும். அப் 10:38 இல், ‘‘நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்’’ என்று படிக்கிறோம். லூக்கா 4:18இல், ‘‘கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்…’’ என்று படிக்கிறோம். இந்த இரண்டு வேதபகுதிகளிலும் இயேசு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எபிரேயரிலுள்ள வேதபகுதியில் அவர் ஆனந்த தைலத்தினால் ஆபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆனந்த தைலம் என்றால் பரிசுத்த ஆவியானவர் என்று அர்த்தமாகும். அவருக்கு எவ்வளவு அருமையான பெயர் சூட்டப்பட்டுள்ளது, அவருடைய ஆவியின் முதல் கனி, ‘‘அன்பு’’ அதற்கு அடுத்த கனி, ‘‘சந்தோஷம்’’ (கலாத்தியர் 5:22).

பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவர் எல்லையில்லாத ஆனந்தத்தின் ஆதாரமாக மாறிவிடுகிறார். அவர் அவர்களை நிரப்பி அவர்கள் ஆத்துமாவை திருப்தியாக்குகிறார், மேலும் அவரை ஏற்றுக்கொண்ட ‘‘ஆத்துமா ஒருபோதும் தாகமடைவதில்லை’’ (யோவான் 4:14). ஒரு விசுவாசி எவ்வளவு உபத்திரவத்தோடு இருந்தாலும் திருவசனத்தை ஏற்றுக்கொள்ளும்போது ‘‘பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தை’’ பெற்றுக்கொள்வான் (1தெசலோனிக்கேயர் 1:6).

பெந்தேகோஸ்த் நாளில் சீஷர்களெல்லாம் பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது, அவர்களை பார்த்தவர்களெல்லாம் அவர்கள் மதுபானத்தினால்

வெறிகொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுமளவுக்கு அவர்கள் மிகுந்த ஆனந்தத்தினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். "இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள்" என்று அவர்கள் சொன்னார்கள் (அப் 2:13). அளவுக்கு மீறிய மதுபானம் அருந்தியதால் ஏற்பட்ட போதையை ஆவியானவரால் நிரப்பப்பட்டதினால் எவ்வித பக்கவிளைவும் இல்லாத ஆரோக்கியமான பரவசத்தோடு ஒப்பிடுகிறார்.

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து… (எபேசியர் 5:18-20)

தேவன் ஒரு நபரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணும்போது, அந்த நபர் விவரிக்க முடியாத ஆனந்தத்தாலும் மகிமையின் நிறைவினாலும் மூடப்பட்டிருக்கும் அளவுக்கு விலையேறப்பெற்ற நறுமணதைலக்குப்பியையே முழுதும் உடைத்து அந்த நபரின் தலையின்மேல் ஊற்றப்பட்டது போல அந்த ஆனந்தமானது தலையிலிருந்து வழிந்து அவனது வஸ்திரத்தின் தொங்கல்வரை வழிந்துகொண்டிருக்கிறது.

## 21. கிருபையின் ஆவி

(The Spirit of Grace)

எபிரேயர் 10:29இல் பரிசுத்த ஆவியானவர் கிருபையின் ஆவி என்று அழைக்கப்படுகிறார்.

> *தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.*

தேவகிருபையை நிர்வகிப்பதும் பயன்படுத்துவதும் பரிசுத்த ஆவியானவருடைய வேலையாக இருக்கிறது என்ற உண்மையை இப்பெயர் நிலைநாட்டுகிறது. அவரே கிருபையுள்ளவராக இருக்கிறார் என்பது உண்மைதான் ஆனால் இந்த பெயரின் அர்த்தம் அதைவிட அதிகமானது. தேவனுடைய பன்மடங்கான கிருபையை நமக்கு அனுபவப்பூர்வமாக்குகிறவர் என்பது அப்பெயர் தரும் பொருளாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவுக்குள் உங்கள் மீது பொழியப்பட்ட தேவனுடைய எல்லையில்லாத பூரணகிருபையை பயன்படுத்திக்கொள்ள உங்களுக்கு ஆற்றலைகொடுத்தது நம் இதயங்களில் வாசமாயிருக்கிறத கிருபையின் ஆவியானவரின் வேலையாக இருக்கிறது. துவக்கமுதலே நமக்கு உரிமைப்பட்ட அவர் இருந்தும் கிருபையின் ஆவியின் வல்லமையினால் நாம் உரிமைப்பாராட்டும்போதுதான் அனுபவப்பூர்வமாக உண்மையாக மாறுகிறது.

## 22. கிருபையின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவி

(The Spirit of Grace and of Supplication)

பரிசுத்தஆவியானவர் கிருபையின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவியும் என்று சகரியா 12:10இன்படி அழைக்கப்படுகிறார்.

> *நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

இந்த வேதபகுதியில் குறிப்பிட்டுள்ள ''கிருபையின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவியும்'' என்ற சொற்றொடரானது சந்தேகத்துக்கு இடமின்றி பரிசுத்தஆவியானவரின் பெயராக இருக்கிறது.

முந்தின பகுதியில் நாம் ஏற்கெனவே கிருபையின் ஆவியைப்பற்றி படித்தோம். தீவிரமாக ஜெபிக்க உதவிசெய்கிறவர் என்ற காரியத்தை இப்பெயரின் மூலம் அறிந்து கொள்கிறோம். எல்லாவகையான ஜெபமும் ஆவியில் செய்யப்படுவதாலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை ஜெபிக்கச்சொல்லியிருப்பதாலும் அவர் இப்படி அழைக்கப்படுகிறார். ''நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி…'' (யூதா 1:20). ''அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், 'ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.' ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:26-27). பரிசுத்த ஆவியானவரை ''கிருபையின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவியுமாக'' இருக்கிறார் என்று அறிந்து கொள்வதே எல்லாவிதமான உண்மையான, வல்லமையான ஜெபத்தின் இரகசியமாக இருக்கிறது.

## 23. மகிமையின் ஆவி

(The Spirit of Glory)

1பேதுரு 4:14லில் பரிசுத்த ஆவியானவர் மகிமையின் ஆவி என்று அழைக்கப்படுகிறார்.

> *நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.*

இத்தகைய தொடர்பினால் அவர் மகிமையின் ஆவி என்று அழைக்கப்படுகிறார். இதேபோன்ற இன்னொரு வகையான தொடர்பையும் நாம் பார்க்கலாம். நாம் பாடுகளை சகிக்கிறோம், பரிசுத்த ஆவியானவரோ மகிமையினை நமக்கு பகிர்ந்தளிக்கிறார்.

> *நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால்*

*சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும். (ரோமர் 8:16-17)*

மகிமையையும் கிருபையையும் நிர்வகிக்கிறவராக பரிசுத்தஆவியானவர் இருக்கிறார். இந்த கிருபையானது பூரணமாக பெருகி மகிமையாக முடிகிறது.

## 24. நித்திய ஆவி

(The Eternal Spirit)

எபிரேயர் 9:14இல் பரிசுத்த ஆவியானவர் நித்திய ஆவி என்று அழைக்கப்படுகிறார். ‘‘நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!’’ பரிசுத்த ஆவியானவரின் நித்தியத்தையும் தெய்வீகத்தையும் எல்லையில்லா மகத்துவத்தையும் இப்பெயர் கொண்டுவருகிறது.

## 25. தேற்றரவாளன்

(The Comforter)

வேதாகமபகுதியில் திரும்பத் திரும்ப பரிசுத்தஆவியானவர் தேற்றரவாளன் என்று அழைக்கப்படுகிறார். உதாரணமாக, யோவான் 14:26 ‘‘என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.’’ யோவான் 15:26 ‘‘பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.’’ (யோவான் 16:27யையும் பார்க்கவும்).

இந்த வேதபகுதியில் ‘‘தேற்றரவாளன்’’ என்று மொழிபெயர்க்கப்பட்ட பெயரின் அர்த்தம் அதுதான். ஆனால் மூலபாஷையிலுள்ள வார்த்தைக்கு அதைவிடவும் ஆழமான அர்த்தம் உண்டு. அதற்கு சரியான மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் ஒரு வார்த்தையில் வெளிப்படுத்துவது கடினமாகும். பாராகிளீட் (Paraclete) என்ற கிரேக்க மொழிவார்த்தைக்கு ‘‘உங்கள் சார்பாக வழக்காடுகிறவர்’’ அல்லது ‘‘உதவிசெய்கிறவர்’’ என்று திருந்திய

‘‘தேற்றரவாளன்’’ என்ற வார்த்தைக்கு ‘‘இன்னொரு பக்கத்திற்கு அழைக்கப்பட்ட ஒருவர்’’ என்பதே எழுத்தின்படியான அர்த்தமாகும். ‘‘இன்னொருவருக்கு வலக்கரமாக மாறுவதுபோல’’ என்றும் கருதலாம். அதேபோல இதே வார்த்தையானது 1யோவான் 2:1 இல் ‘‘பரிந்துபேசுகிறவர்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ‘‘என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.’’ கிரேக்கமொழியில் வரும் வார்த்தையின் அர்த்தத்தின்

முழுவீரியத்தையும் "பரிந்துபேசுகிறவர்" என்ற மொழிபெயர்ப்பு தரவில்லை. பரிந்து பேசுகிறவர் அல்லது வழக்காடுகிறவர் (advocate –அட்வகேட்) என்ற வார்த்தையானது இலத்தீன் மொழியில் அட்வகேட்டஸ் (advocatus) என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதற்கு "இன்னொருவருடைய வேலையை தொடர்ந்து செய்ய அழைக்கப்பட்டவர்" என்பதே சரியான அர்த்தமாகும். ஆனால் நடைமுறையில் தற்போது 'குறுகிய மட்டுப்படுத்தப்பட்ட அர்த்தத்தை கொடுப்பதாக இருக்கிறது. பாராகிளிட்டஸ் (parakletos) என்ற கிரேக்க வார்த்தையானது "தேற்றரவாளன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு சரியான மொழிபெயர்ப்பு "கூடவே தோளோடு தோள் கொடுக்க நிற்கும்படி அழைக்கப்பட்டவர் என்று பொருள். "எப்போதும் நிரந்தரமாக நம்பக்கத்தில் நிற்கும்படி", "எப்போதும் ஆயத்தமாக நம் அருகில் நிற்கும்படி", எப்போதெல்லாம் அவருடைய உதவி தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் நம் காரியத்தை ஏற்று நடத்தும்படி, எப்போதும் நம்பக்கத்தில் நிற்கும்படி அழைக்கப்பட்டவர் என்று பொருள். இப்பெயரானது பரிசுத்தஆவியானவரைக்குறித்து ஆச்சரியமானவிதத்தில் மென்மையாகவும் விளக்கமாகவும் பொருள்தருவதாக இருக்கிறது. சிலவேளைகளில் பரிசுத்தஆவியானவரைக் குறித்து நாம் நினைத்துப்பார்க்கும்போது அவர் வெகுதொலைவில் இருப்பது போல தோன்றுகிறார். ஆனால் பாராக்கிளிட்டஸ் என்ற பெயரை நினைக்கும்போது அல்லது வெளிப்படையான ஆங்கில மொழிப்பெயர்ப்பான "நமக்குப்பதிலாக அருகிலேயே ஆயத்தமாக நிற்பவர்" அல்லது "பங்கெடுத்துச்செய்கிறவர்" என்ற பொருள்தரும் அப்பெயரை நினைக்கும்போது அவர் எவ்வளவு அருகாமையில் இருக்கிறார்.

இதுவரை சீஷர்களுக்கு இயேசுவே கூடஇருப்பதாக வாக்களித்தார், அவரே அவர்களது பாராக்கிளிட்டஸாக இருந்து வந்தார். அவர்கள் எப்போதெல்லாம் சிக்கலான அவசரகால சூழலில் இருந்தார்களோ அப்போதெல்லாம் அவரை நோக்கிப்பார்த்தார்கள். ஒரு முறை சீஷர்களுக்கு எப்படி ஜெபிக்கவேண்டும் என்பதில் சந்தேகம் வந்தது. உடனே அவர்கள் இயேசுவிடம் திரும்பி, "ஆண்டவரே ஜெபிக்க கற்றுத்தாரும்" (லூக்கா 11:1) என்றார்கள். கர்த்தர் அவர்களுக்கு அற்புதமான ஜெபத்தைக் கற்றுக்கொடுத்தார், அதுவே பலநூற்றாண்டுகளுக்கு பின்னும் தொடர்ந்து போதனைசெய்துகொண்டிருக்கிறது.

> "அதற்கு அவர்: நீங்கள் ஜெபம்பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக; 3. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்;" (லூக்கா 11:2-4)

இன்னொரு முறை பேதுரு, கலிலேயே அலையில் அமிழ்ந்துகொண்டிருக்கும்போது, "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கூப்பிட்டான் (மத்தேயு 14:30). "உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்" என்று சொல்லி அவனை இரட்சித்தார். அவசர நேரங்களிலெல்லாம் அவரைநோக்கித் திரும்பினார்கள். இப்போது அந்த இயேசு, பிதாவிடம் சென்றுவிட்டார். அவரைப்போலவே இன்னொருவரும் நம்மோடிருக்கிறார்; அவரைப்போலவே தெய்வீகமானவர், அவரைப்போலவே ஞானமுள்ளவர், அவரைப்போலவே வல்லமையுள்ளவர், அவரைப்போலவே நேசமுள்ளவர்,

அவரைப்போலவே மென்மையுள்ளவர், அவரைப்போலவே உதவும் ஆற்றலுள்ளவர், எப்போதும் நம்பக்கத்திலேயே ஆயத்தமாக நிற்கிறார். இன்னும் சிறப்பாக சொல்லுமளவுக்கு அவர் நம் இதயங்களில் வாசமாயிருக்கிறார், நாம் அவரை நம்புவோமானால் நம்மை கரம்பிடித்து உதவுவார்.

பாராக்கிளிட்டஸ் என்ற பெயரை உடைய பரிசுத்தஆவியானவரைக் குறித்த சத்தியம் நம் இதயத்தில் ஆழமாய் பதிந்து வாசம் செய்யுமானால், அது எல்லாவகையான தனிமை உணர்வையும் நம்மைவிட்டு நிரந்தரமாக துரத்திவிடும். எல்லா நண்பர்களைவிடவும் மிகச்சிறந்த இவர் நம்மோடு எப்போதும் இருக்கும்போது நம்மால் எப்படி தனிமையாயிருக்க முடியும்?

மிகவும் தனிமையானவாழ்க்கை என்று இயற்கையாக அழைக்கப்படும் ஒரு வாழ்க்கையை கடந்த எட்டுவருடங்களாக பொறுத்துக்கொண்டு வாழ்ந்தேன். எனது வேலையினிமித்தமாக பெரும்பாலான நேரங்களில் நான் எனது மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு பிரிக்கப்பட்டநிலையில் வாழ்ந்தேன். தொடர்ந்து 18மாதங்களாக எனது குடும்பத்தாரைவிட்டு பிரிந்து அநேக ஆயிரம்மைல் தூரத்திற்கு அப்பால் வாழ்ந்தேன். 'என்னோடு எப்போதும் எல்லாவற்றிற்கும் போதுமான நண்பராகிய அவர் இல்லாவிட்டால் அந்தத்தனிமை உணர்வை என்னால் தாங்கமுடியாமலிருந்திருக்கும்.

என் வாழ்க்கை சம்பவங்களை நினைத்துப்பார்க்கிறேன். ஒருமுறை நான், தெற்கு கடலில் புயல்காற்றால் ஆடிக்கொண்டிருந்த நீராவிக்கப்பலின் தளத்தில் அங்கும் இங்கும் ஒரு இரவுநேரத்தில் நடந்துகொண்டிருந்தேன். என் குடும்பத்தினரெல்லாம் சுமார் 18,000மைல் தொலைவுக்கு அப்பால் இருந்தார்கள். என் அதிகாரிகள் பாலத்தில் மும்முரமான வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். நான் கப்பல் தளத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது, "இங்கே நீ தனிமையாயிருக்கிறாய்" என்ற எண்ணம் வந்தது. அதை அடுத்து இன்னொரு எண்ணம் வந்தது, "நான் தனியாக இல்லை; தனிமையிலும் புயற்காற்றிலும் கப்பலின் மேல்தளத்தில் என் பக்கத்தில் பரிசுத்தஆவியானவர் நடந்து கொண்டிருக்கிறார்." ஆம் அவர் போதுமானவர். இதுபோன்ற ஒரு சம்பவத்தை நான் ஒருமுறை செயின்ட் பால் என்ற இடத்தில் நடந்த வேதாகம கருத்தரங்கில் பகிர்ந்துகொண்டேன். கூட்டத்தின் முடிவில் ஒரு டாக்டர் என் பக்கத்தில்வந்து, "பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம்மோடிருக்கிறவராக இருக்கிறார் என்ற எண்ணத்தை பகிர்ந்துகொண்டதற்காக உங்களுக்கு நன்றி சொல்லவிரும்புகிறேன். நான் ஒரு டாக்டராக இருக்கிறேன். அடிக்கடி நான் இரவிலும் புயலிலும் நோயாளிகளைப் பார்க்க நான் காரோட்டி செல்லவேண்டியதாக இருக்கிறது. அவ்வேளைகளில் நான் மிகவும் தனியாக இருப்பதாக உணர்ந்தேன். ஆனால் இனி ஒருபோதும் நான் தனியாக இருப்பதாக உணரமாட்டேன், ஏனென்றால் என்பக்கத்தில் எப்போதும் பரிசுத்தஆவியானவர் கூடவே வருகிறார் என்பதை நான் எப்போதும் உணர்வேன்" என்று கண்ணியமாக மென்மையாக கூறினார்.

பரிசுத்தஆவியானவர் எப்போதும் கூடவே இருக்கிறார் என்ற எண்ணமானது இதயத்தில் நுழைந்து உள்ளே வாசம் செய்யுமானால், அந்த எண்ணமே எல்லாபயத்தையும் நிரந்தரமாக உங்களைவிட்டு துரத்திவிடும். எந்த அபாயம் வந்தாலும் தெய்வீக நபராகிய இவர் எப்போதும் நம் பக்கத்தில் ஆலோசனைதந்து நம் காரியத்தைச் செய்ய ஆயத்தமாக இருக்கும்போது நாம் எப்படி பயந்துகொண:டிருக்க முடியும்? நமக்கெதிராக கூக்குரலிடும் கும்பலாக இருந்தாலும் அல்லது நம்மை தாழ்த்துகின்ற புயற்காற்றாக இருந்தாலும் பிரச்சினையே இல்லை. ஏனென்றால் அவர்களுக்கும் நமக்கும் இடையே அவர் நம்பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறார்.

ஒரு நாள் ஒரு மாலைநேர கருத்தரங்கம் முடிந்ததும் 4மைல் தூரங்களுக்கு அப்பாலிருக்கும் எனது நண்பனின் வீட்டிற்கு நடந்து வருவதாக வாக்களித்திருந்தேன். அப்பாதையானது ஒரு ஏரிக்கரையோரமாக சென்றது. எனது நண்பனுடைய வீட்டிற்கு புறப்பட்டபோது இடிமின்னலுடன் புயல்காற்று வீச ஆரம்பித்தது. இதை நான் ஒரு பொருட்டாக கருதவில்லை. நான் வருவேன் என்று வாக்களித்திருந்தபடியால் நான் எப்படியாவது போய்சேரவேண்டும் என்று உணர்ந்தேன். அப்பாதையானது சிலநேரங்களில் ஏரிக்கரையின் மிகஅருகில் விழும்பில் போய்கொண்டிருந்தது. அப்பாதையானது சிலவேளைகளில் ஏரிக்கரையின் அருகாமையிலும் சில நேரங்களில் பலஅடி தூரம் பள்ளத்திலும் சென்றது. மேகமூட்டத்தினால் அந்த இரவு எங்கும் காரிருளாக இருந்தது. ஆகவே முன்னே இருப்பது என்ன என்று அறியமுடியாமலிருந்தது. திடீரென்று கண்ணைப் பறிக்கும் மின்னல் அடித்தபோது பாதை எங்கே செல்கிறது என்று அடையாளம் காணமுடியாததாக இருந்தது. மீண்டும் காரிருள். கீழே ஏரி கொந்தளித்துக்கொண்டிருந்ததை என்னால் கேட்க முடிந்தது. நடப்பதற்கு ஆபத்தான இடமாக இருந்தது. அந்த வாரங்களில் பரிசுத்த ஆவியானவரின் தனிப்பண்புகளைக் குறித்து பிரசங்கித்துக்கொண்டிருந்தேன். 'எப்போதும் நம்மருகில் ஆயத்த நிலையில் இருக்கும் நண்பனாக இருக்கிறார்' என்று நான் பேசிய காரியம் எனக்கு நினைவுக்கு வந்தது. "எப்போதும் அருகிலிருக்கும் நண்பராக பரிசுத்தஆவியானவர் இருக்கிறார் என்பதை மக்களிடம் சொல்லிக்கொண்டிருந்தாயே அது என்ன?" என்ற எண்ணம் எனக்கு வந்தது. "எனக்கும் கொந்தளிக்கும் ஏரிக்கும் இடையே உள்ள பாதைவிழும்பில் பரிசுத்த ஆவியானவர் என்னோடு நடந்து வருகிறார்" என்று நானே எனக்குள் பேசிக்கொண்டேன். இப்போது பயமில்லாமல் பரவசத்தோடு நான் முன்னோக்கி சென்றுகொண்டிருந்தேன்.

நாங்கள் இலண்டனில் இருக்கும்போது, ராயல் ஆல்பெர்ட் ஹாலில் மதியத்திற்கு பிறகு நடந்த கூட்டத்தில் ஒரு வாலிபப்பெண் கலந்துகொண்டாள். அவள், இருட்டைக்குறித்து அளவுக்கு அதிகமான பயத்துடன் இருந்தாள். இருட்டு அறைக்குள் தனியாக செல்வது அவளால் கூடாதகாரியமாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம் அருகில் ஆயத்தமாக இருக்கும் நண்பராக இருக்கிறார் என்று சொன்ன எண்ணம் அவளுடைய மனதில் ஆழமாக பதிந்தது. அவள் வீட்டிற்கு சென்று தாயிடம், ஒரு அருமையான சத்தியத்தை பகலில் கேட்டதாகவும், அந்த எண்ணமானது அவளது அனைத்து பயங்களையும் அவளைவிட்டு நிரந்தரமாக நீக்கிவிட்டது என்று சொன்னாள். அப்போது இலண்டனில் குளிர்காலம், சீக்கிரமாக இருட்டிவிடும். "நீ சொல்வது உண்மையானால் வீட்டின் மேல்மாடிக்குச் சென்று அங்குள்ள இருண்ட அறைக்குள் கதவை அடைத்துக்கொண்டு இரு. பார்க்கலாம்" என்று அவளுடைய தாயார் சொன்னார்கள். அவள் உடனே குதித்தெழுந்து மேல்மாடிசென்று முற்றிலும் இருண்ட அறைக்குள் பூட்டிக்கொண்டிருந்தாள். அனைத்து பயங்களும் பறந்துவிட்டது என்றும் அம் முழுஅறையும் ஒரு அற்புதமான மகிமையால் நிறைந்திருந்தது.

பரிசுத்தஆவியானவர் ஒரு தேற்றரவாளராக – எப்போதும் நம்மருகில் ஆயத்தமாக நிற்கும் நண்பராக பாராக்கிளிட்டாக இருக்கிறார் என்ற எண்ணமானது தூக்கமின்மை என்ற வியாதியை குணமாக்கும் ஒரு நல்ல மருந்தாக இருக்கிறது. தூக்கம் வராமல் இரண்டு வருடங்கள் பயங்கரமாக கஷ்டப்பட்டேன். போதுமான உறக்கம் இல்லாததால் ஒவ்வொரு இரவும் படுக்கைக்குச் செல்லும் போது செத்தவனைப் போல செல்வேன். நான் உறங்கியாக வேண்டும் ஆனால் என்னால் உறங்க முடியவில்லை. அந்த இருவருடங்கள் எனக்கு படுவேதனையாக இருந்தது. அதிலிருந்து நான் விடுதலை பெறாவிட்டால் என் மனம் பித்துப்பிடித்துவிடும்போல இருந்தது. கடைசியாக எனக்கு நிவாரணம் வந்தது. தூக்கமின்மையினால் அவதிப்பட்ட நான் இரண்டு வருடங்களுக்குப் பிறகு சிரமமில்லாமல்

படுக்கைக்குச் சென்றேன். ஒரு இரவு நான் உறங்கிவிடுவேன் என்று படுக்கைக்குச் சென்றேன். ஆனால் மீண்டும் உறங்கமுடியாத வியாதி மீண்டும் வந்தது. உறங்க முடியாவியாதி மறுபடியும் என்படுக்கையில் அமர்ந்துகொண்டு என்னை நோக்கி பல்லைகாட்டியவாறு ''இன்னும் அதிகமாக இரண்டுவருடங்கள் உன்னோடு இருக்கும்படி வந்துவிட்டேன்'' என்று சொல்லிக்கொண்டிருந்தது. ''உறக்கமில்லாத இன்னும் இரண்டு பயங்கரமான வருடங்களா?'' என்று நினைத்தேன்.

அக்காலை வேளையில் வந்திருந்த மாணவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் தனிப்பண்புகளைக் குறித்தும், பரிசுத்தஆவியானவர் எப்போதும் நம் அருகில் ஆயத்தமாக இருக்கும் ஒரு நண்பனைப் போல இருக்கிறார் என்று அவர்களுக்கு விளக்கிக் கூறியிருந்தேன். ''இக்காலைவேளையில் மாணவர்களுக்கு என்ன போதித்துக்கொண்டிருந்தாய்? அவர்களிடம் என்ன பேசிக்கொண்டிருந்தாய்?'' என்ற எண்ணம் வந்தது. நான் மேல்நோக்கியவாறு ஆசீர்வதிக்கப்பட்ட தேவனுடைய ஆவியானவரே, நீர் இங்கே இருக்கிறீர். நான் தனிமையாக இல்லை. ஆவியானவரே என்னிடம் ஏதாவது சொல்லவேண்டியதிருந்தால் சொல்லுங்கள், நான் கவனித்துக் கேட்பேன்'' என்று சொன்னேன். எனது கர்த்தரும் மீட்பருமாகியவரைக் குறித்து சில ஆழமான விலையேறப்பெற்ற காரியங்களை எனக்குக் காண்பிக்கத் துவங்கினார், அவைகள் என் ஆத்துமாவை ஆனந்தத்தினாலும் இளைப்பாறுதலினாலும் நிரப்பிற்று. நான் நன்றாக நித்திரை செய்தேன் என்பதை மறுநாள் காலை விடிந்தபிறகுதான் அறிந்துகொண்டேன். அன்றிலிருந்து உறங்கமுடியாத நிலை எப்போதாவது வந்தாலும் பரிசுத்த ஆவியானவர் என்னோடிருக்கிறார் என்பதை நினைவுபடுத்திக்கொள்வேன். என்னோடு அவர் பேசவேண்டும், எனக்கு போதிக்க வேண்டும் என்று அவரை நோக்கிப் பார்ப்பேன். அவர் என்னோடு பேசுவார், உறக்கமில்லாத தன்மை என்னை விட்டுப் பறந்துவிடும்.

பரிசுத்த ஆவியானவர் பாராகிளிட் அதாவது. எப்போதும் நம் அருகில் ஆயத்தமாக இருக்கிறார் என்ற எண்ணமானது உடைந்த இதயத்தை குணமாக்கும். பிரியமானவர்களின் மரணத்தாலும் பிரிவாலும் உலகில் அநேகர் இதயவேதனையுடனும் உடைந்த இதயத்தோடும் அநேகர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அநேக உதாரணங்களை சொல்ல முடியும்.

# அதிகாரம் 6

## பொருள்சம்பந்தமான உலகில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை

பரிசுத்த ஆவியானவரின் வேலையானது மனிதனோடு நின்றுவிடுகிறது என்று நினைக்கின்றன நபர்கள் அநேகர் இருக்கிறார்கள்; ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலையானது அதைவிட பரந்து விரிந்த அளவில் உள்ளது என்று தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக வெளிப்படுத்துகிறார். பொருள் சார்ந்த இவ்வுலகில் பரிசுத்த ஆவியானவருக்கு மூவனையான வேலை உண்டு என்பதை வேதாகமம் போதிக்கிறது.

**பொருளாதார உலகில் சிருஷ்டிப்பில் மற்றும் மனிதனின் சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை வல்லமையுள்ளதாக இருக்கிறது** *(The creation of the material universe and of man is effected through the agency of the Holy Spirit)*
“கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது” என்று சங்கீதம் 33:6 இல் படிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் பெயர்களைக் குறித்து படித்தபோது அவர் யெகோவா தேவனின் சுவாசமாக இருக்கிறார் என்று பார்த்தோம். இந்த வேதவசனத்தின்படி வானமண்டலங்களும் அதிலுள்ள அனைத்து நட்சத்திரக் கூட்டங்களும் பரிசுத்த் ஆவியானவரால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. “தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்க உயிர் கொடுத்தது” என்று யோபு 33:4 சொல்கிறது. மனிதனின் சிருஷ்டிப்பானது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாயிருக்கிறது. திடப்பொருள் சார்ந்த உலகத்தையும் ஜீவனையும் பகிர்ந்தளிக்கும் சிறப்பியல்பானது பரிசுத்தஆவியானவருக்கு சூட்டப்பட்டுள்ளது.

தேவகுமாரனுக்குள்ளாக அவர் மூலமாக சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது என்று வேதபகுதியானது நமக்கு போதிக்கின்றது. உதாரணமாக கொலோ 1:16 “ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்தில் உள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.” இதே போன்ற காரியத்தை எபிரேயர் 1:2லும், “இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.” மேலே குறிப்பிட்ட சங் 33:6 சிருஷ்டிப்பின் வேளையில் வார்த்தையும் ஆவியும் இணைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். மனிதனின் குடியிருப்புக்காக இப்பூமியானது மறுபடியும் திருத்தியமைக்கப்பட்ட சிருஷ்டிப்பின் வேளையிலும் பிதாவும் வார்த்தையானவரும் பரிசுத்த ஆவியானவரும் பிரசன்னமாயிருப்பதை காணலாம்.

(ஆதியாகமம் 1:1-3வரை படித்துப் பார்க்கவும்). அனைத்து சிருஷ்டிப்பின் வேளையிலும் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை இந்த வேதபகுதிகளைப் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிரூபணமாகிறது. பிதாவானவர் அவருடைய குமாரனில் அவருடைய ஆவியின் மூலமாக கிரியை செய்கிறார்.

**ஜீவனுள்ளவைகளை பாதுகாக்கும் தனிச்சிறப்புக் குணமானது பரிசுத்த ஆவியானவருக்கு அருளப்பட்டுள்ளது**

"29. நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். 30. நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்." திட,திரவ,வாயுயினான உலகை சிருஷ்டித்தது மட்டுமல்லாமல் ஜீவராசிகளை காக்கும் வேளையிலும் ஈடுபட்டிருக்கிறார் என்பதை இந்த வசனத்தில் கண்டுகொள்ளலாம்.

பொருட்களை தோன்றச்செய்வது மட்டுமல்லாமல் தோன்றப்பண்ணினவைகளை பராமரிப்பது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கை (spiritual life) மட்டுமல்லாமல் சரீரபிரகாரமானவைகளும் (material beings) தேவனுடைய ஆவியினால் பராமரிக்கப்படுகிறது. சரீரபிரகாரமானவைகளை உருவாக்கியது மட்டுமல்லாமல் அவைகளின் தொடர்ச்சியும்கூட அவைகளுக்குள்ளிருக்கும் தேவஆவியின் பிரசன்னத்தினால் நடைபெறுகிறது. இப்படி சொல்வதால் பிரபஞ்சமே தேவன் என்று அர்த்தம் ஆகாது. ஆனால் அதற்குள்ளிருக்கும் தேவனுடைய பிரசன்னத்தினால் (immanence of God) நிலைபெற்றிருக்கிறது. தேவன் மீது பயபக்தியூட்டும் உன்னதமான மேன்மையான சத்தியமாக இருக்கிறது. இந்த உண்மையை திரித்துக் கூறியதால் வந்த விளைவுதான் பல்வேறு ரூபங்களில் எண்ணற்ற பலதெய்வங்கள் உண்டு என்ற தவறான நம்பிக்கை வரக்காரணமாயிற்று.

**திடதிரவவாயு சம்பந்தமான பிரபஞ்சத்தை மேம்படுத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும் சிறப்புத்தன்மையானது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

பரிசுத்தஆவியானவரின் மூலமாக இப்பிரபஞ்சமானது உருவாக்கப்பட்டது என்பதோடு மட்டுமல்லாமல், பரிசுத்தஆவியானவரின் மூலமாக அது முதல் இம்மட்டும் பராமரிக்கப்பட்டுவருது மட்டுமல்லாமல், ஆரம்பநிலையில் ஒழுங்கீனமும், வெறுமையுமாக இருந்து இப்பிரபஞ்சத்தை மிகவும் நன்றாக இருக்கிறது என்று சொல்லுமளவுக்கு மேம்படுத்தியதும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடாக இருக்கிறது.

> "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று." ஆதியாகமம் 1:2-3

இப்பிரபஞ்சத்தின் துவக்கத்தை இவ்வேதபகுதி தெரிவிக்கிறது. ஆழமாக கற்க விரும்பும் வேதமாணவனுக்கு பூமியை மறுபடியும் சீர்திருத்தி அமைக்கும் காரியத்தை படிப்படியாக விளக்குவதாக உள்ளது. ஒழுங்கீனமும் வெறுமையுமாய் இருந்து பூமியை இந்நாளில் காண்பது போல நேர்த்தியாக பரிசுத்தஆவியனாவரின் மூலமாக மேம்படுத்தப்பட்டதை குறிப்பிடுகிறது.

இத்தொடர் செயல்பாட்டினை ஆதி 2:7 தெரிவிக்கிறது. “தேவனாகிய **கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.”** உயர்வாழ்வாகிய மனித வாழ்வு தோன்றுவதற்கு தேவஆவியே காரணமாக இருக்கிறார். வேதாகமமானது மனிதனுடைய மீட்பைத் தெரிவிக்கும் சரித்திரபுத்தகமாக இருக்கிறது; ஏதோ பூமியை உருமாற்றி அமைத்த சம்பவம் மட்டுமல்ல, ஒவ்வொரு காலகட்டத்திலும் புதிதான மேம்பட்ட காரியங்களை பரிசுத்தஆவியானவரால் பகிர்ந்து வளங்கப்படுவது போல இருக்கின்றது. முதலாவது உயிரற்ற பொருள் உண்டாக்கப்படுகின்றது, அடுத்து அசைகின்ற பொருள்; பின்னர் வெளிச்சம்; பின்னர் தாவர இனம்; அதன்பின் மிருக இனம்; அடுத்து மனித இனம்; பின்னர் புதிய மனிதனாகிய இயேசுகிறிஸ்துவைப் பார்க்கிறோம். அவரே தேவனுடைய பூரணமான தேவகுமாரனாக இருக்கிறார். தேவஆவியானவரின் ஈடுபாட்டால் ஒரு தாழ்ந்த நிலையிலிருந்து அதைவிட சிறந்த நிலைக்கு மேம்படுத்தப்படுதல் சாத்தியமாகிறது என்ற வேதாகம சிந்தையை தருகிறது. இந்நாளில் சிலமக்கள் இப்பூமியானது கடவுளில்லாமல் தாமாக வந்தது என்று நம்புகிற நம்பிக்கைக்கு முற்றிலும் மாறுபாடான கருத்தை உடையதாக இருக்கிறது. சிருஷ்டிப்பைக் குறித்த விளக்கத்தில் பரிசுத்தஆவியானவரின் மிக முக்கியமான வேலையாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, அவருடைய மீட்பின் வேலையாக இருக்கிறது. சிருஷ்டிப்பானது படிப்படியாக இருப்பதும், தேவனுடைய வார்த்தையானது மிக அதிகமாக செயல்பாட்டில் இருப்பதை வெளிப்படையாக காணலாம். “தேவன் சொன்னார்” என்ற சொற்றொடரானது ஆதியாகமத்தில் முதல் அத்தியாயத்திலேயே 10முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 7

## பரிசுத்த ஆவியானவர் உலகத்தை கண்டித்து உணர்த்துகிறார்

நமக்கு ஒரு இரட்சகர் தேவை என்னும் ஆழமான உணர்வே இரட்சிப்பின் அனுபவமாக துவங்குகிறது. இப்படி ஒரு தேவை நமக்கிருக்கிறது என்ற உணர்வை நமக்குக் கொண்டுவரச்செய்கின்றவரே பரிசுத்தஆவியானவர்தான்.

*8. அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். 9. அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், 10. நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், 11. இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.* (யோவான் 16:8-11)

**மனிதரின் பாவத்தை கண்டித்து உணர்த்துவது பரிசுத்த ஆவியானவரின் வேலையாக இருக்கிறது என்பதை இவ்வேதபகுதியில் பார்க்கிறோம்.**

பாவத்துக்கு ஏதுவாக என்ன தவறை செய்தார்கள் என்பதை சுட்டிக்காட்டி மனிதர்களிடம் ஒரு ஆழமான குற்ற உணர்வை ஏற்படுத்துவதாகும். பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறவர் என்ற வாக்குபண்ணப்பட்ட அவருடைய வேலை நிறைவேறத்துவங்குவது முதலில் அப் 2:36-37இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*36. ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.*

*37. இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்.*

இயேசு கிறிஸ்து வாக்களித்தபடி பரிசுத்த ஆவியானவர் வந்தார்; அவர் வந்தபோது பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்தினார். அவர்களது கர்த்தரையும் அவர்களது கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்ட குற்றவுணர்வால் அவர்களது இருதயத்தை குத்தும்படி செய்வார். பெந்தேகோஸ்தே நாள் வருவதற்கு முந்தின நாளில் அதே பிரசங்கத்தை பேதுரு செய்திருந்தால் எவரும் குத்தப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் இப்போதோ பேதுரு, பரிசுத்த ஆவியினால் நிறைந்து காணப்படுகிறான் (அப் 2:4); பரிசுத்த ஆவியானவர் பேதுருவையும் அவர் சொன்ன வார்த்தைகளையும் எடுத்துக்கொண்டு, பேதுரு மற்றும் அவனுடைய வார்த்தைகள் என்னும் கருவியின் மூலமாக (ஊடகத்தின் மூலமாக), அவனுடைய வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்தவர்களை கண்டித்து உணர்த்தினார்.